T. 2027

# ஆஸ்திகர் ஞானபோதமும்,

## நாஸ்திகர் கடவுள் விளக்கமும்.

இஃது
பாபனாசம் தாலூகா வழுத்தூர்
ஜனாப். பா. கு. அப்துர்ரஹ்மான்,
அவர்களால் எழுதப்பட்டது.

---

இச்சிறுவெளியீடு
நாஸ்திகப்பெரியார் கனம். ஈ. வெ. ராமசாமி நாயக்கர்,
ஆய்க்கவுண்டன்பாளையத்தில், கடவுள் விளக்கம்
பற்றி செய்த பிரசங்கத்தில் கடவுளும்,
மதமும், கற்பனை என்று விளம்பியதை
மறுத்து ஆஸ்திகர் ஞானத்தை
சுருக்கமாக போதிக்கிறது.

270
1005

விலை அணா 0—2—0.

*All Rights Reserved.*

10—5—1938

786

பிஸ்மில்லா ஹிர்ரஹ் மானிர்ரஹீம்.

# ஆஸ்திகர் ஞான போதமும்,

## நாஸ்திகர் கடவுள் விளக்கமும்.

இவ்வுலகின்கண் காலத்திற்குக்காலம் விபரீதக்கொள்கைகள் தோன்றுவதும், அவைகள் ஆதாரவின்றி மறைவதும் சகஜமாகவிருந்து வருகிறதென்பது யாவரும் அறிந்தவிஷயம். அவ்வாறே சிலகாலமாக தென்னிந்தியாவில் சுயமரியாதை இயக்கத்தலைவர் கனம் ஈ. வே. ராமசாமிநாயக்கர் குடியரசு, புரட்சி, விடுதலை முதலிய பத்திரிகைகள் மூலமும், பல மகாநாடுகளில் பிரசங்கங்கள் மூலமும் நாஸ்தீகத்தைப் பிரசாரம் செய்து வருவதும் ஒருவருக்கும் மறைந்ததன்று. சென்ற வருஷம் றபீயுல்அவ்வல் மாதம் திருநபிதினத்தன்று அய்யம்பேட்டையில் முஸ்லீம்களால் கூட்டப்பட்ட ஓர் மகாநாட்டில் கனம் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் தலைமை வகித்தார். இதை நாம் கேள்வியுற்று ஆஸ்தீகர் மகாநாட்டுக்கு நாஸ்தீகர் எப்படி தலைமை வகிக்கிறார் யென்று வியப்படைந்தோம். அம்மகாநாட்டில் நாயக்கர் பேசும்பொழுது தான் ஒரு மதத்தைப் பின்பற்றுவதானால் முஸ்லீம் மதத்தையே பின்பற்றி இறப்பேன் என்று சொன்னதானது முஸ்லீம்களுக்கு ஏதோ ஓர் நன்னம்பிக்கை உண்டாகிவிட்டதேபோல்காணப்பட்டது பிறகு திருச்சியில் சு. ம. மகாநாட்டில் ஜனாப் கலிபுல்லாசாஹிப் தலைமை வகித்துப் பேசும்பொழுது சு. ம. இயக்கத் தலைவர் நாஸ்தீகக்கொள்கையை மாற்றிக்கொண்டால் அவ்வியக்கத்தில் பலர்சேர்ந்து நல்லபலமுள்ள ஓர்வகுப்பாக ஆகக்கூடுமென்றும்

வற்புறுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட சம்பவங்களெல்லாம் நடந்த பின்னரும் 23-1-38ல் ஆய்ச்சவுண்டன்பாளையத்தில் கனம் நாயக்கர் 'கடவுள் விளக்கம்' பற்றி பிரசங்கம் செய்திருக்கிறார். அப்பிரசங்கம் 29-1-38ல் விடுதலையில் வெளியாகியிருக்கிறது. அது ஆஸ்தீகரை (கடவுள் உண்டுயென்பவரை) பொதுவாகத் தாக்கியும், கடவுளும், மதமும் கற்பனையென்றும், கடவுளை உண்டா? இல்லையா? என்று விசாரிக்கப் புகுவதே வீண்மெனக்கெடு என்றும், கடவுள்பக்தி வைப்பதைவிட கடவுள்பக்தி வைக்காமலிப்பதே உன்னத நிலையென்றும் அதுமாத்திரமா? நாஸ்தீகர்களை (கடவுள் இல்லையென்பவர்களை) விட ஆஸ்தீகர்கள் தான் மிசமிசப் பாபிசளென்றும், அதற்காக வரவு சிலவு திட்டமும் பார்த்துக்கொள்ளும்படியாகவும் ஆஸ்தீகர்களை அறைகூவி அழைக்கிறார். இவருடைய உள்ளமை இப்பிரசங்கத்தினால்வெளியாகிவிட்டபடியினால்இவர் இன்னமும் நாஸ்தீகராகவே யிருந்து வருகிறார் யென்பதை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம் இந்த நாஸ்தீக முனிவர் இன்னும் ஹிந்துவாகவேகாணப்படுகிறார். ஏனென்றால் இவருடைய ஊண், உடை, நடை, நொடி பாவனைகளெல்லாம் ஹிந்து மதத்தை அனுசரித்ததாகவே காணப்படுகிறது. ஹிந்து மதமோ உலகத்தில் தோன்றியுள்ள எல்லா மதங்களைக்காட்டிலும் புராதனமானது. இது எவ்வளவு பழசோ, அவ்வளவுக்கு பழயதும் புகுந்துவிட்டது. இம்மதம் நான்கு வேதத்தையும் வைத்திருக்கிறது. அவையாவன :- இருக், யஜுர், சாமம், (அதர்வணம்), ஆகிய இந்த வேதங்களை அனுசரித்து நிற்கும் சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்களில் மனிதப்பண்பைக் காலத்திற்குக்காலம் புகுத்தி, மதத்தின் புனிதத்தன்மையை மாற்றி, சமத்துவம். சகோதரத்துவம் கெட்டும், விதவா விவாகம் மறுக்கப்பட்டும், எண்ணிக்கையற்ற கடவுள் தோன்றியும், ஹிந்து மதமானது மிக்க ஆபாச

நிலையையெய்திவிட்டதென்பதை ஹிந்துமதவாதிகளே ஒப்புக் கொள்ளுவார்கள். இப்போது மனிதர்களால் சிருஷ்டிக்கப் பட்ட எண்ணிக்கையற்ற கடவுள்களை நினைத்து, உச்சரித்து, பூஜிப்பதில் நாயக்கருக்கு ஏற்பட்டத் தலைவலியும், மனக்கசப் புமே, உள்ள ஒரு கடவுளையும் ஒழித்துவிட துணிந்து விட்டார்போலும். ஆனால், இஸ்லாம் மதத்தில் காணப்படும் சமத்துவம், சகோதரத்துவத்தைப்பற்றி நாயக்கர் பாராட்டு கிறார். அவ்வாறே நாஸ்திக புத்தியை விட்டொழித்து முஸ்லீம்களுடைய கடவுள், கடவுள் பக்தி முதலியவற்றையும் ஆதரிப்பாரானால் இஸ்லாம் மதமானது இவரை இருகை கொண்டு தழுவிக்கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

இக்காலத்தில் விசேஷமாகத் தென்னிந்தியாவில் கனம் ஈ. வெ. ரா. நாயக்கரால் பிரசாரஞ் செய்யப்பட்டுவரும் சுய மரியாதை இயக்கமானது, ரஷ்யாவில் விளங்கிவரும்(Communism) சமதர்மக் கொள்கைக்கு ஒப்பாகவே காணப்படுகிறது. மேலும், அக்கொள்கையை இந்தியாவில் பரத்துவதற்கு கனம் நாயக்கரே இந்திய ஏஜெண்டு என்றுசொன்னால் மிகையாகாது. அந்த'கடவுள்' இல்லையென்கிற சமதர்மக் கொள்கைபோலவே கடவுள் உண்டா ? இல்லையா ? என்பதை விசாரிப்பதுங்கூட வீண்மெனக்கெடு யென்று நாயக்கர் பன்முறை கூறுகிறார். கடவுளே இல்லையாயின், கடவுளால் அருளப்பெற்ற வேதமு மில்லை. வேதமே இல்லையாயின், வேதத்தின் வழிபாடாகிய மதமே இல்லாமல் போய்விடும், அப்படி மதமே இல்லாமற் போய்விடின் மனிதர்கள் கடிவாளமில்லா தமிருகங்களேபோல் திரியவேண்டியதே. ஓர் மதம் மனித வாழ்க்கைக்கு இன்றி யமையாததாக யிருக்கிறது. ஒரு மனிதன் சிறுபிள்ளையாய் பிறந்ததுமுதல், பால் குடிக்கிற வரம்பிலிருந்து கல்விகற்றல், விவாகமுறைப்படி செய்வித்தல், உற்றார், உறவினர், ஊரார்,

தேசத்தாருக்குச் செய்யவேண்டிய தொண்டாற்றல், கடவுள் பக்தி, கடவுள் வணக்கம் முதலியவைகளால் மோக்ஷவிடடைய முயற்சித்தல், கடசியாக மண்ணில் வைத்தல் வரையிலுள்ள சகல கைங்கரியங்களிலும் ஓர் மதத்தைப் பின்பற்ருமல் முடியாதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியிருக்க இப்போது கனம் நாயக்கர் பிரசாரஞ்செய்துவரும் சுயமரியாதையானது ஒரு மதமா? அல்லது நாஸ்திகத்தைப் பிரசாரஞ்செய்யும் ஒரு கூட்டமா? அல்லது சமதர்மக் கொள்கையைப் பரத்தும் ஒரு சங்கமா? இது யாது? என்பதை ஒருவராலும் சரியாகச் சொல்லமுடியவில்லை என்ருலும் இது ஒரு மதமல்லவென்பது மாத்திரம் ஸ்பஷ்டம். ஆகவே ரஷ்யாவில் (சம்மியூனிஸம் என்று வழங்கப்படும்) சமதர்மக்கொள்கைக்கு இந்தியாவில்மாறுபெயரால் சுயமரியாதை என்றும் வழங்குவதாகவே நாம் கொள்ளுகிருேம். சமதர்மக் கொள்கையை ஒழிக்கவும், அது உலகத்தில் பரவாமல் தடுக்கவும் எல்லா இராஜாங்கங்களும் முயற்சி யெடுத்துக்கொள்வது போல், நாமும் இந்த சு. ம, இயக்கம் பரவாமல் நசிக்கிவிட ஒவ்வொருவரும் கங்கணங்கட்டி நிற்க வேண்டும். அமெரிக்காவில் நிர்வாணசங்கம் ஒன்றிருக்கிறது. அதிலும் அநேகர் சேர்ந்து பிறந்தமேனியாக யிருக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகிருர்கள். இக்கிளர்ச்சியை அடக்க அமெரிக்கர்களும், அரசாங்கமும் முயற்சி யெடுத்துக் கொள்ளுவதுபோல நாமும் இந்த சு. ம. இயக்கம் பரவாமல் பார்த்துக்கொள்ளுவதோடு அரசியல் வழியாகவும் இதை நசுக்கிவிட ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்ருல் இவர்களுக்கு கடவுளில்லை. கடவுளில்லையாயின் வேதம் ஏது? வேதமில்லையாயின் மதம் ஏது? மதமே இல்லையாயின் இந்த சுயமரியாதை மனித வர்க்கத்தை எவ்வளவுதூரம் நடத்தி கரைசேர்க்க வல்லது? நிற்க:

சென்ற 23–1–38ல் ஆய்க்கவுண்டன்பாளையத்தில் கனம் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கடவுள் விளக்கம்பற்றி செய்துள்ள பிரசங்கங்கத்தால் இவர் தன் சுயரூபத்தில் வெளிவந்ததுபற்றி நாம் பாராட்டுகிறோம். ஏனெனில் இன்னமும் முஸ்லீம்கள் இவர்களின் பகட்டுவார்த்தைகளில் ஏமாறாமல் இருக்க நல்ல அத்தாட்சி ஏற்பட்டதுபற்றி நாம் சந்தோஷிக்கிறோம். நாயக்கர் ஹிந்துமதக்கடவுளையும், அதன் சரியை, கிரியையாதி ஊழல்களையும் எடுத்துச்சொல்லும்பொழுது நமக்குயாதொரு வேலையுமில்லை. ஆனால் பொதுவாக ஆஸ்திகர்களைத் தாக்கி கடவுள் என்பதே கற்பனை யென்று ஸ்தாபிக்க இவர் முன் வந்ததால் முஸ்லீம்களாகிய நாம் இதற்கு மறுப்பு எழுதாமல் இருக்கமுடியாது. நாயக்கர் செய்துள்ள கடவுள் விளக்கம் இவரின் அறியாமையால் செய்யப்பட்டதென்றும், அந்த ஞானக்கல்வியில் இவருக்குக் கொஞ்சங்கூட அறிவும், ஆற்றலும், அனுபவமுமில்லையென நிரூபித்து அவருக்கும், இதை வாசிக்கும் மற்றவர்களுக்கும் ஓர் உபதேசமாகவும், மனிதர்கள் இதன் விளக்கத்தால் நேர்வழி பெறலாமென்னும் நல்லெண்ணத்தோடு இதனை வெளியிட்டிருக்கிறேன். வாசிப்பவர்கள் இதிலுள்ள உண்மைகளை விளங்கி மோக்ஷ வீடடைய கடவுள் அருள்புரிவாராக. ஆமீன்.

N. B.— நமது நாயக்கர் ஓர் ஹிந்து சமயவாதியானதால் இவர் விளங்கிக்கொள்ளும் வகையாகவே விஷயங்களை விவாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆய்க்கவுண்டன்பாளையத்தில் **23-1-38**ல் கடவுள்பற்றி விடுத்த பிரசங்கத்தில் :—

1. "இதுவரையில் கடவுளைப்பற்றிவிளக்க எத்தனையோ ஆத்மஞானிகள், சித்தர்கள், முத்தர்கள் என்போரும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், அவதாரங்கள், கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்போரும், எவ்வளவோ அரும்பாடுபட்டு இருக்கிறார்கள். ஆனால் முடிந்ததா? முடிவு இதுதான் என்று சொல்லப்பட்டதா? அல்லது இவர்களைப்பின்பற்றியவர்களுக்காவது புரிந்ததா? புரியவைக்க முடிந்ததா? கடவுள் ஆதியில்லாதது, அந்தமில்லாதது, உருவமில்லாதது, அது இல்லாதது, இது இல்லாதது, புரியப்பட்ட, அறியப்பட்ட சங்கதி எதுவும் இல்லாதது" என அடுக்கிக் கொண்டேபோய் அப்படிப்பட்ட ஒன்று இருப்பதாக அல்லது இருக்கும் என்பதாக அல்லது இருந்துதானே தீரவேண்டும் என்பதாக அல்லது இருக்கிறதாக எண்ணிக்கொண்டுதான் ஆகவேண்டும் என்பதாகச் சொல்லி விடுகிறார்கள்." என்றும்,

2. "இன்று இந்நாட்டினரால் மனித ஆத்மாவுக்குமீறிய ஒரு ஆத்மா உடையாரெனக்கருதி மகாத்மா என்று சொல்லப்படுபவராகிய தோழர் காந்தியார் "சத்தியம் தான் கடவுள்" என்கிறார். சைவசமயிகள் "அன்பே சிவம்" என்கின்றனர். ராமலிங்கஸ்வாமிகள் "அறிவு தான் கடவுள்" என்கின்றனர் என்றும்,

3. ஒரு மனிதன் கடவுள் உண்டா? இல்லையா? என்ற விஷயத்திலே கவலைசெலுத்தாது அதை அறிவதற்கு

மெனக்கெட்டு குழப்பமடையாது இருப்பதற்காகவே மனித சமூகவாழ்வுக்கு நன்மையும் அவசியமுமான காரியங்கள், குணங்கள் எவைஎவையோ அவைகளைத் தான் கடவுள் எனப் பெரியார்கள் சொன்னார்கள். இதைப்பார்த்தாவது மனிதனுக்கு அறிவுவந்து உண்மையுணர்ந்து பேசாமல் இருக்கவேண்டாமா? என்றும்'' சொல்லுகிறார்.

மேற்சொல்லியுள்ள 1, 2, 3 வாசகங்களின் முதல் வாசகத்தால், ஆத்மஞானிகள் முதல் கடவுளால் அனுப்பப் பட்டவர்கள் (றசூல்மார்கள்) வரையுள்ள பெரியார்களால் கடவுளை இன்னதென்று புரிய வைக்கமுடியவில்லை யென்றும், 2-வது வாசகத்தால் பல ஞானிகள் பல்வேறு பெயர்களால் அதாவது "சத்தியம்தான் கடவுள்" என்றும், "அன்பே கடவுள்" என்றும், இன்னும் "அறிவே கடவுள்" என்றும், இவ்வாறே வெவ்வேறு விதமாய் அழைத்திருக்கிறார்களென் றும், 3-வது வாசகத்தால் நன்மையான காரியங்கள், குணங் கள், இவைகளையே கடவுளாக பெரியார்கள் சொல்லிவிட்ட தாகவும் சொல்லுகிறார். இதனால் கடவுளே பொய்யான கற்பனையென்றும், எத்தனையோ பெரியார்கள் வந்தும், ஒரு வரும் கடவுளை உண்டென்று ஸ்தாபிக்கவில்லை யென்றும், முடிவு கூறுகிறார். இதனால் கொஞ்சங்கூட சந்தேகமில்லாமல் நாஸ்திகத்தை ஸ்தாபிக்க கனம் நாயக்கர் கங்கணங்கட்டி நிற்கிறார் என்பது தெளிவாய் விளங்குகிறது.

கனம் நாயக்கர் சொல்வதில் எத்தனையோ பெரியார்கள் இன்னும் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் (றசூல்மார்கள்) முதலியவர்களால் கடவுளை அறிவித்துக் கொடுக்கமுடிந்ததா? என்று கேட்கிறார். நாம் அதற்குப் பதிலாக பெரியார்கள்

(றசூல்மார்கள்) கடவுளை அறிவிக்க உலகில் தோன்றி மனித கோடிகளை பக்திவழியே அழைத்துச் சென்று முக்திபெறச் செய்ததை இவர் அறிந்துகொள்ளமுடியவில்லையா? இன்றைக்கு உலகில் ஐம்பது கோடி முஸ்லிம்கள் இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றி ஒரே கடவுளை பக்திகொண்டு நடந்துவரவில்லையா? அப்படி பக்திவைக்காது ஒருவன் நடக்க எத்தனிப்பானுயின் அஸ்திவாரமில்லா கட்டிடத்தை போலும், வேலியில்லா பயிரைப் போலும் அழிந்து போவது திண்ணம் என்பதை இவர் அறியக்கடவர். இன்னும் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று சொல்லப்படுகிற எங்கள் நபி முகம்மது (சல்லல்லாஹு அலைஹிவசல்லம்) அவர்கள் இவ்வுலகின்கண்தோன்றி அறிய தியாகமும், யோகமும் செய்து ஆவேச நிலையெய்தி (வஹீயைப்பெறும் மக்காமை எய்தி) புர்க்கான் வேதமாகிய குர் ஆனைக்கொண்டுவந்தார்கள். அதன் ஒரு வாக்கியத்திற்கு நிகராக இந்த 1350 வருஷகாலமாக ஒருவரும் ஒரு வாக்கியம் கொண்டுவர சக்தி பெற்றூர்களில்லை. இதுவே உலகில்பெரும் அற்புதமாக இருந்துவருகிறதென்பது ஒருவரும் மறுக்க முடியாத உண்மையாகும். எங்கள் நபி அவர்கள் தாங்கள் கொண்டுவந்த வேத வழிபாட்டின்வழியே கோடானுகோடி ஜனங்களை (ஈமான் கொள்ளும்படிச்செய்து) சன்மார்க்கவழி தவறாது நடந்து கடவுளை இணை வைக்காது வணங்கியும், முக்தி சாதனத்தைப் பெற்றுமோக்ஷவீட்டடையும்படி செய்திருக்கிறூர்கள். அவர்கள் காலத்திலிருந்து இதுவரையில் எத்தனையோ கோடி ஜனங்கள் பின்பற்றி யிருக்கிறூர்கள். இன்னும் உலகமுடிவுநாள் வரையிலும் எத்தனையோ கோடி ஜனங்கள் பின்பற்றுவார்கள் என்பதை இவர் அறியவேண்டும், நிற்க,

இவர் ஓர் ஹிந்து; இவர் சு. ம. இயக்கத்தலைவராயினும் இன்னும் இவர் ராமசாமியாகவே இருக்கிறார். இவர் இந்த ஹிந்துமதக் கோட்பாட்டின்படிக்காவது கடவுளை விசாரித்த துண்டா? உலகத்தில் மனிதவாழ்வுக்கு ஒரு மதம் இன்றியமையாதது. மதமோ: கடவுளால் அருளப்பெற்ற வேத வழிபாட்டின்படிக்கு நடக்கும் மார்க்கத்திற்கு மதம் என்று பெயர். ஹிந்துக்களுக்கு கடவுளால் அருளப்பெற்ற வேதமென்று சொல்லிக்கொள்ளப்படும் இருக், யஜுர், சாமம், (அதர்வணம்) ஆகிய வேதங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று வேதவிசாரம் செய்தாரா? உபநிஷத்துக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிற தென்று தெரிந்துகொள்ள இவருக்கு ஆற்றலுண்டா?

கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக —குறள்.
கற்றதனா லாயபய னென்கொல் வாலறிவ
நற்றாள் தொழாஅ ரெனின் —குறள்.

கனம்நாயக்கர் எதைப்படிக்கவேண்டுமோ அதைபடிக்கவுமில்லை யென்றும், இன்னும் தன்னையறிந்தஞானிகளை அடுத்து தாள்பணிந்து கடவுளின் உண்மையைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கவுமில்லை யென்றும் புலனாகின்றது. ஆகவே கடவுளைத் தெரிந்துகொள்ள வேத ஆராய்ச்சியுமில்லை (தனக்கே தெரியுமென்கிற இறுமாப்பை விடுத்து) பெரியாரை அடுத்து நல்போதனையும் பெறவுமில்லை. இந்த யோக்கியதையோடுங் கூடிய இவர் கடவுள் விளக்கம் செய்யப்புகுந்தது விந்தையிலும் விந்தையாம். அது மாத்திரமா? கடவுளை அறிவதெப்படி? என்கிற முறையாகிலும் தெரிந்தனரா? அதுவுமில்லையே. விளக்குவாம்.

## I வது அத்தியாயம்.

ஞானம் என்றால் அறிவு.
ஞானி என்றால் அறிந்தவன். எதை அறிந்தவன் ?
தன்னை அறிந்தவன் ஞானி.
எவன் தன்னை அறிந்தானோ அவன் தன் தலைவனை அறிந்தான். இதுதான் ஞான சூத்ரம்.

இந்த ஞானமுறைப்படி, எவன் கடவுளை அறிய விரும்பினானோ அவன் தன்னை முன்னதாக அறிந்து கொள்ளவேண்டும்.

ஒருவன் ஆழ்கடலில் நீந்துவதற்குப் பிரியப்பட்டால் முன்னதாக அவன் குளங்குட்டைகளிலும், பிறகு ஆறு, ஏரிகளிலும் நீந்திப் பழகிக்கொண்டு பிறகு ஆழ்ந்த கடலில் இறங்குவதற்குத் துணிய வேண்டுமல்லவா? அவ்வாறே நமது நாயக்சரும் கடவுளின் உண்மையைத் தெரிந்துகொள்ள உண்மையில் முயற்சித்திருந்தால், தனக்கு அதிசமீபத்துள்ள தன்னையே முன்னதாக ஆராய்ந்து தனது தத்துவங்களையும், தனக்குள்ள சக்திகளையும் உணர்வரேல் பின்னர் கடவுளுடைய குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ள தகுதி பெறுவர் என்று திட்டமாய்ச் சொல்லலாம். ஆனால் மேற்கண்டவாறு கடவுளை தத்துவ விசாரணை செய்தபின்னரும் 'சாதனை' இன்றியமையாதது. என்று அறியவும்

சாதனையின்றி யொன்றை சாதிப்பா ருலகிலில்லை
ஆகையாலிந்த நான்கும் அடைந்தவர்க் கறிவுண்டாகும்
நூதனவிவேகி யுள்ளம் நுழையாது நுழையுமாகில்
பூதசென்மங்கள் கோடி புனிதனும் புருடனாமே.

—கைவல்லியம்

இவ்விதம் போதிய வேத ஆராய்ச்சி எய்திய பின்னரும் ஞானகுருவை அடுத்து உபதேசம் பெற்றபின்னரும் சாதனை யின்றி கடவுளின் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியா தென்பதுவேதசம்மதமும், ஞானிகளின் அனுபவமுமாயிருக்க இவருக்கு ஒருபெரியாரும் கடவுளைப் பிடித்துக் கொடுக்க முன்வரவில்லையென்று குறைகூறுகிறார். ஒருவன் இவரிடம் வந்து சிற்றின்பம் எப்படி யிருக்குமென்று கேட்டால் இவர் என்ன சொல்லுவார்? நீயும் ஒருபெண்ணை மணந்து அவ ளுடன் கூடியிருந்து கலவியில் தெரிந்து கொள்ளுவாய் என்று சொல்லுவாரல்லவா? கேவலம் இச்சிற்றின்பத்துக்கு இவ் வுலகில் ஒத்துக்காண்பிக்க வகையில்லா திருக்க பேரின்பத் துறையை இவருக்குக் காண்பிப்பதெப்படி? இவர் கடவுளை அறிய விரும்பினால்:

(1) வேதவிசாரம்
(2) சத்சம்பத்து(பெரியோர்களை அடுத்துப்பழகல்)
(3) தன்னையறிதல் (தத்துவ விசாரம்)
(4) பக்தி வைத்தல்
(5) சாதனை (விடாமுயற்சி செய்தல்)

ஆகியவைகளை அனுசரித்து நிம்மதியடைய மனச்சாந்தி பெற்று முக்தி சாதனத்தைப்பெற்றுக் கொள்ளாதவரையில் கடவுளின் இரகஸ்யத்தை தெரிந்துகொள்ளா முடியாதென்று அறியக்கடவர். நாயக்கருக்கு சுய அறிவுமில்லை. கேட்டறிவு மில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் இவர் கடவுள்விளக்கஞ் செய்ய முன்வந்ததானது ஒருவன் கைக்கோலைக்கொண்டு கடல் ஆழம் பார்க்கப்போனதற் கொப்பாயிருக்கிறது.

## II வது அத்தியாயம்.

"ஆதியந்தமில்லாத அறியப்பட்ட புறியப்பட்ட சங்கதி எதுவுமில்லாத ஒரு கடவுள் இருந்துதானே தீரவேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள்" எனமிக்கவருந்தி குறை கூறுகிறார் ;

நாம் இப்பொழுது உலகத்தில் காணும் சகலமும் சிருஷ்டிக்கப்பட்ட பொருளாகவே காணப்படுகிறது. சிருஷ்டிக்கப்படும் சகலவஸ்துக்களுக்கும் அவைகள் உற்பத்தியாகும் பொழுது ஒரு துவக்கமும் அவைகள் அழியும்பொழுது ஓர் அந்தமும் உண்டாகின்றது சிருஷ்டிகர்த்தாவுக்கும் இதே அழிதல் உண்டானால் அவர்கர்த்தாவாயிருத்தல் யாங்ஙனம்? நமது நாயக்கர் உட்கார்ந்திருக்கும்பொழுது இவர்கையில் ஓர் எறும்பு ஊறினால் அந்த ஸ்பரிச உணர்ச்சியை இவரின் அறிவு தெரிந்துகொள்ளுகிறதே; அவ்வாறே இந்த 'கை' அந்த அறிவை தெறிந்துகொள்ள முடிகிறதா? இல்லையே. இப்படியே சிருஷ்டிக்கப்பட்ட நாம் கர்த்தாவை அறிந்து கொள்ளாமலும் கர்த்தா சிருஷ்டிகளை அறிந்துகொண்டும் இருக்கிறார் என்று பெரியார்கள் சொன்னார்கள். மேலும் நம்முடைய அறிவு நாம் உலகத்தில்பார்த்து தெரிந்த வஸ்துக்களைத்தவிற வேறொன்றைத் தெரிந்துகொள்ள சக்தியற்றது. கடவுளோ சிருஷ்டிகளுக்கு அதீதமானவர். அப்படியிருக்க இந்த வர்ணிப்பில் கடவுளை எப்படி அமைக்கமுடியும்? அப்படி வர்ணிக்கமுடியாத கடவுளை எப்படி தெரிந்துகொள்வது? என்று இவர்கேட்கலாம். விளக்குதும். இவ்வுலகின்கண் காணப்படும் சகலவஸ்துக்களும், பொருள் இடம், காலம் ஆகிய இலக்ஷணத்துக்குள்பட்டதாகும். ஓர்வஸ்து என்றால் அது ஒரு பொருளாகயிருத்தல் வேண்டும் ( அதாவது அளவால் குறிப்

பிடத் தக்கதும், நிறத்தால் வர்ணிக்கத்தக்கதாகவு மிருத்தல் வேண்டும்) அவ்வஸ்து தோன்றுவதற்கு ஓர் இடம் வேண்டும். அதுவும் ஓர் குறித்த காலத்தில்தான் தோன்றும். இப்படியே பொருள், இடம், காலம் ஆகிய இலக்ஷணத்தில் கட்டுப்பட்ட சகல வஸ்த்துக்களும் அழிகின்றன. இது கண்கூடு. அழியாத கடவுளே, இன்னும் நித்தியமான கடவுளே. இன்னும் அதீதமான கடவுளே, சொல்லால் வர்ணித்துக்காட்டமுடியாத கடவுளை இந்த அறிவுக்கு எப்படி எடுத்துக்காட்டுவது! பின்னே அறியமுடியாதா? எனின்; அவனவன் தானே தன் அறிவைக்கொண்டு தெரிந்து கொள்ளவல்லது, சொல்ல முடியாதது. உதாரணமாக: சிற்றின்பத்தை எடுத்துகொண்டால் அவ்வின்பம் உணரவல்லது, சொல்லமுடியாதது போலவாம்.

இன்னும் அவரோ (கடவுள்) எல்லாமாய், அல்லவுமாய், நித்தியமாய், பூரணமாய், சத்தாய், சித்தாய், ஆனந்தமாய் உள்ளவர். அவரை தத்துவ விசாரணையால் அறிந்து பக்தி வைத்து, தாமதகுணம், ராஜசகுணம் இரண்டினையும் பதமாக அடக்கிப் பழக்கி சத்துவகுணத்தில் நிலைத்து, சாந்தி யடைந்து கேட்டல், சிந்தித்தல், தெளிதல் முதலிய சாதனங்களுடன், சிரவணம், மனனம், நித்தியாசனம் முதலிய சாதனைகளுடன் பழகி வந்தால் கடவுள்நிலை தெரிந்துகொள்ளமுடியுமே தவிற இவர் நினைக்கிறபடி கடவுளை இவர்கையில் பிடித்துக்கொடுக்க ஒருவருமே இவ்வுலகிலில்லையென்பதை இவர் அறியக்கடவர். இவர் வேண்டுகிற ஆதிஅந்தமுள்ளதும், அறியப்பட்டபுறியப் பட்ட சங்கதி எல்லாமுள்ள கடவுள்கள் இவர் சமயத்தவருள் ஏராளமா யிருக்கின்றன. பிரதி வருஷந்தோறும் கலியாணம் செய்துகொள்ளுகிற கடவுள் உண்டு. தேவடியாள்வீட்டுக்கு போகிற கடவுள் உண்டு. வயிறுபெறுத்த விநாயகர் உண்டு. ஆண்கடவுளுமுண்டு பெண்கடவுளுமுண்டு. இந்தக்கடவுள்கள்

பிடிக்கவில்லையென்று சொல்லுகிற இவர் ஆதிஅந்தமில்லாத நித்தியக்கடவுளை நம்பி சாதித்தாலென்ன? அப்படி சாதித்த பின்னராவது கடவுள் விளக்கஞ்செய்ய வெளிக்கிளம்பினுல் இவருக்கு மரியாதையுண்டு. அதுவுமின்றி கடவுளைவிளக்க முன்வந்தது பிறவிக்குருடன் சூரியனை வர்ணிக்க முன்வந்ததற்கு ஒப்பாக இருக்கிறது.

## III வது அத்தியாயம்.

இனி 2-வது பாராவில்கண்ட விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம்.

(a) மகாத்மாகாந்தி "சத்தியம்தான் கடவுள்" என்றும்
(b) சைவசமயிகள் "அன்புதான் கடவுள்" என்கின்றனர் என்றும்,
(c) ராமலிங்கசுவாமிகள் "அறிவுதான் கடவுள்" என்கிருர் என்றும், இப்படியே வெவ்வேறு பெரியார் வெவ்வேறு விதமாகக் கூறியுள்ளார் யென்றுஞ் சொல்லுகிருர்.

இவர் இப்படிச்சொல்லுவதால் "கடவுள்விசாரம்" என்ற கல்வியை இவர் கொஞ்சங்கூடகற்கவில்லையென்றே தெரிகிறது இங்கு நமது நாயக்கர் அவர்களையே கேட்போம்: இவருக்கு அறிவு உண்டா? என்ருல், ஆம் உண்டு என்றே சொல்லுவர். இவருக்கு பிறர்பால் அன்பு உண்டா? என்ருல், ஆம் உண்டு என்பர். இன்னும் இவரை சத்தியந்தவருது நடப்பது உத்தமந்தானே என்ருல், ஆம் என்று ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே இவர் ஒருவராயிருக்க இத்தனை குணங்களும் இவருக்கு எப்படி யிருக்கிறது என்பதை உணர்ந்திலர் போலும்.

என் கைகள் நானல்ல என்றாலும், என்னைவிட்டு வேறுமல்ல; என் கால்கள் நானல்ல என்றாலும், என்னைவிட்டும் அன்னியமுமல்ல. என்உடல் நானல்ல (ஏனென்றால் பிரேதத்திற்கும் உடல் இருக்கிறது) என்றாலும், என்னை விட்டும் வேறல்ல. அவ்வாறே கடவுளுக்கு சத்குணங்களுண்டு. அக்குணங்களில் அன்பு பாலிக்கிறபோது அன்பையும், சத்தியம் மிகைத்துக்காண்கிறபோது சத்தியத்தையும் பெரியார் குறித்துச் சொன்னார்களேதவிர கடவுளே அந்தச் செயலோடு முடிந்துவிடவில்லை யென்றறியக் கிடக்கிறது. ஆனால் அறிவைப்பற்றியும் இவ்விடம் குறிப்பிட்டிருக்கிறார். இங்கும் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்றுசொல்லுகிறாரே தவிர தன் அறிவின் விளக்கத்தைச் செப்பினாரில்லை. நாம் நேரிலேயே நாயக்கருக்கு அறிவு புகட்டுகிறோம். கேட்பாராக.

துரியநிலையில் (ஏமக்கான்) சுத்த அறிவு ஒன்றே மிச்சப்படுகிறதாயிருக்கிறது. அந்த அறிவு இப்போது நாயக்கருக்கு இருக்கிற அறிவல்ல. இது ஜந்நிபாததோஷங்களில் தலைக்காட்டாது மறைந்துவிடும். அந்த அறிவு எதுவென்பதை விளக்குவாம்.

அறிவு அறியாமை இரண்டு மகற்றிச்
செறிவறிவாய் எங்கும் நின்ற சிவனைப்
பிரிவறியாது பிரா னென்று போற்றுங்
குறியறி யாதவர் கொள்ள றியாரே. —திருமந்திரம்.

என்ற செய்யுளுக்கிணங்க பூரண அறிவு ஒன்றே மிச்சப்படுமாதலால் அந்த அறிவைக்குறித்து பெரியோர்கள் இலக்ஷணஞ் சொல்லியுள்ளார்கள். நாயக்கருக்கோ இதில் ஞான அறிவு கிடையாது. இவர் இதில் பிரம்மசாரியாகவே யிருக்கிறார். பெண் கலியாணஞ்செய்து கலவியில் இன்பம் பெறுப

வர்களுடைய நிலையை இவர் எப்படி அறியப் போகிறார். இந்த யோக்கியதையோடுங்கூடிய இவர் கடவுள் விளக்கஞ் செய்யப்போனது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டவனுக் கொப்பாகவே யிருக்கிறது.

## IV வது அத்தியாயம்.

இனி 3-வது பாராவை எடுத்துக் கொள்ளுவோம்.

1 "ஒரு மனிதன் கடவுள் உண்டா? இல்லையா? என்ற விஷயத்தில் கவலை செலுத்தாது, அதை அறிவதற்கு மெனக்கெட்டு குழப்பமடையாது இருப்பதற்காகவே மனித சமூக வாழ்விற்கு நன்மையும் அவசியமான காரியங்கள், குணங்கள் எவை எவையோ அவைகளைத்தான் கடவுள் எனப் பெயர் சொன்னார்கள்" எனச்சொல்லுகிறார்.

"ஒருமனிதன் கடவுள் உண்டா இல்லையா என்ற விஷயத்தில் கவலைசெலுத்தாது அதைஅறிவதற்கு மெனக்கெட்டு குழப்பமடையாது இருப்பதற்காகவே' என்பதனால் கடவுளைப்பற்றித் தெரிந்துகொள்ள முயற்சிப்பது வீண்மெனக்கெடுயென்று இவர்அறியாமையால் விளம்புகிறார். இதுதான் வெகுமுக்கியமான விஷயமாகும் மனிதன் உலகிலேதோன்றி அவன்செய்வதென்ன? இவர்சொல்வதேபோல் கடவுள்விசாரமின்றி உலகவாழ்க்கையிலேயே மொத்துண்டுகிடப்பது மனிதலக்ஷியமாயின் இவர் சொல்லும்வாழ்க்கை மாடோட்டகங்கள் நாய், பன்றி, இவைகளுடைய வாழ்க்கைக்கு மேற்பட்டதல்லவென்றே சொல்லவேண்டும். மனிதலக்ஷியம் என்னவென்பதை இவர் ஓர் அணுவேனும் உணரவில்லை போலும், நாம் செப்புவதை இப்போதிலும் இவர் கேட்கட்டும்.

மனிதன் ஓர் உயரியலக்ஷியத்தைக் கொண்டு படைக்

கப்பட்டிருக்கிறான் பூமியிலுள்ளவைகளும் வானத்திலுள்ளவைகளும் இன்னும் இவை இரண்டினுக்கிடையேயுள்ளவைகளும் இவன் வசமாக்கப்பட்டிருக்கின்றன. இவன் சகல வஸ்துக்களுக்கும் அதிகாரியாயிருக்கிறான், இன்னும் இவன் கடவுளுடைய பிரதிநிதியாகவுமிருக்கிறான். இவன் மிருக இச்சையை விட்டும் தப்பி மேலான சத்துவகுணமடைந்து சாந்திபெற்று முக்தியடைவதே (முஸ்லிமாவதே) மனித லக்ஷியமாயிருக்கிறது. மேற்சொன்ன முக்தி சாதனத்தைப் பெறுவதற்குள்ள யாத்திரையில் இவ்வுலகமும் இவ்வுலகத்திலுள்ள சாதனங்களும் இல்வாழ்க்கையும் இல்வாழ்க்கையிலுள்ள சகல சன்மார்க்கத்துறைகளும் தான் அடைய வேண்டிய முக்திசாதனத்துக்கு துணைக்கருவியாகக் கொள்ளப்படுகிறதே தவிர இவர் சொல்லுகிற இல்வாழ்க்கையே மனித லக்ஷியமாயின் மனிதனுக்கும் மிருகத்துக்கும் ஒரு வித்தியாசமுமிராது. ஆதலின் மனித லக்ஷியத்தை நிர்மாணித்துக் கொண்ட பின்னரே தான் பின் செய்யவேண்டியதை நிர்மாணிக்கவேண்டும், மனிதன் கடவுளை விசாரிப்பது முதல் கடமையாயிருக்க அதை இவர் வீண்மெனக்கெடுஎன்கிறார். உலகவாழ்க்கைமட்டும் மனிதலக்ஷியமாயின் இவர் சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அதற்கு மாறாக இவ்வுலகவாழ்க்கை நாம் கோறிய லக்ஷியமாகிய முக்திக்கு ஓர் துணைச்சாதனம் என்றே இவர் தெரிந்து கொள்ளக்கடவர்

2 இன்னம் “மனிதசமூகவாழ்வுக்கு நன்மையும் அவசியமான காரியங்கள் குணங்கள் எவை எவையோ அவைகளைத்தான் கடவுள் எனப்பெரியார்கள் சொன்னார்கள்” என்கிறார். இதையும் விசாரிப்பாம்.

பிர்மா, விஷ்ணு, சிவன் இவை மூன்றும் முறையே

ஆக்கல், சாத்தல், அழித்தல் என 'கடவுளின்' மூன்று தத்துவங்களுக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. கடவுள் சிருஷ்டித் தொழிலை புரியும்போது 'பிர்மா' என்றும், ஜீவர்களைக் காத்து இரக்ஷிக்கும்போது விஷ்ணு என்றும், நாசத் தொழிலை புரியும்போது சிவன் அல்லது ருத்திரன் என்றும் அழைத்து விடுகிறார்கள். இன்னும் நாவின் வன்மைக்கு ஸரஸ்வதி என்றும், கடவுளின் முனிவான தொழிலுக்கு 'காளி' 'மாரியாயி' என்றும், கருணையுள்ள தொழிலுக்கு 'ஸ்ரீதேவி' 'லக்ஷிமி' என்றும் பெயருமிட்டு அதற்கு ஒவ்வோர் உருவமும் கற்பித்து விட்டார்கள். அப்படி கற்பித்த உருவங்களை இவரைச் சேர்ந்த ஹிந்துவகுப்பினர் வணங்கவும் செய்கிறார்கள். இதுவோ இவரினத்தவர் வணங்கும் எண்ணிக்கையற்ற ஸ்வாமிகளில்இவைகளும்சேர்ந்தேயிருக்கின்றன நாம் இந்தப் பிசகை விசாரிக்க வரவில்லை. நிற்க;

நாம் மேலே சொல்லியுள்ளதில் கடவுள் சிருஷ்டித் தொழிலை புரியும்போது 'பிர்மா' என்று அந்த சிருஷ்டித் தொழிலுக்கு மாத்திரம் பெயரிட்டார்கள். இதில் மெய்ப் பொருள் (சத்து) எது பொய்ப்பொருள் (சத்துப்போலி) எது என்பதை கவனிக்கவேண்டும். கடவுள் சிருஷ்டிக்கிறார்.

'சிருஷ்டித் தொழிலுக்கு 'பிர்மா' என்று பெயர். இச் சிருஷ்டித் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் கடவுளை பிர்மாவென்றழைக்கிறார்கள். இந் நிலைமையிலும் கடவுளைத் தவிர பிர்மாவுக்குப் பொருளுண்டா? ஆகவே கடவுள் மெய்ப் பொருளாகவும் பிர்மாவை பொய்ப் பொருளாகவும் சொல்லவேண்டும். இன்னும் இந்த சிருஷ்டித் தொழில் கடவுள் செயலேயன்றி வேறல்ல, அப்படியிருக்க செயலே கடவுளாதல் யாங்ஙனம்? கடவுளே இல்லையாயின் சிருஷ்டித்

தொழில் எவ்வாறு நிகழும்? அப்படி செயலே நிகழாதிருக்கும்போதும் கடவுளில்லையா?

'(மனித வாழ்க்கைக்குறிய) நன்மையான குணங்கள் காரியங்கள் 'இவைகளையே சடவுள்' எனப் பெரியார்கள் சொன்னார்கள்'' என்றதை வேறு விதமாய் கவனிப்போம்.

இப்பொழுது நாயக்கரையே உதாரணமாக எடுத்துக் சொல்லுவோம். இவர் ஓர் வீடுகட்டும் வேலையில் அமர்ந்து கொத்துவேலை செய்து வந்தார். அப்போது இவருக்குக் கொத்தன் என்கிற பெயர் கிடைக்கிறது. அப்பொழுதும் நாயக்கர் நாயக்கரே. பிறகு ஓர் அரசாங்கத்துக்குத் தலைவராக இருந்தார். அப்பொழுது இவர் ஓர் அரசன் என்று பெயர் பெற்றார். அப்பொழுதும் நாயக்கர் நாயக்கரே. பிறகு இவர் ஓர் சைனியத்திற்கு தளபதியாக யிருந்து வந்தார். அப்பொழுது இவருக்குப்பெயர் சேனாதிபதி யென்றழைக்கப் பட்டது, அப்பொழுதும் நாயக்கர் நாயக்கரே. பிறகு இவர் கடவுள் இல்லை யென்று பிரசாரஞ் செய்தார். அதுபொழுது இவருக்கு நாஸ்தீகப்பெரியார் என்று பெயரிட்டார்கள். அப்பொழுதும் நாயக்கர் நாயக்கரே. பின்னர் இவரே கடவுள் உண்டென்று பிரசாரஞ் செய்தார். அதுபொழுது இவருக்கு ஆஸ்தீகபெருமான் என்று பெயர் கொடுத்தார்கள். அப்பொழுதும் நாயக்கர் நாயக்கரே. இதுபோலவே சடவுள் ஒன்றுயிருக்க அவரின் தத்துவங்கள் வெளியாகும்போது அவ்வத் தத்துவங்களுக்கு சமயோசிதமாய் பெயர் கொடுத்தால் அந்த தத்துவங்களே கடவுளாய் விடுகிறதில்லை. இதில் முன்குறித்துள்ள விஷயத்தை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது: என் உடல் நானல்ல என்றாலும் என்னைவிட்டு வேறுமல்ல இதில் என்ன முக்கியமிருக்கிறதென்றால்? என்

உடலேமட்டும் நானென்ருல் உயிர் யாருடையது? என்ற கேள்வி நிசழும். இதனுல் என்னுடைய பூரணத்தன்மை குறைந்து விடுகிறது. ஆகவே கடவுள் பூரணத்தன்மை உடையவர். அவரின் ஓர் தத்துவத்தை, ஓர் குணத்தை அல்லது ஒரு செயலேமாத்திரம் கடவுள் என்று ஒரு பெரியாரும் சொல்ல முடியாது. நாயக்கர் சொல்வதில் கடவுளே இல்லாதது போலும், சமூக முன்னேற்றத்திற்குறிய நல்லொழுக்கங்கள், செயல்கள், குணங்களேயே கடவுளாகப்பெயர் வைத்துவிட்டதாகக் கூறுகிருர். அப்படியானுல் நாயக்கர் இல்லேயா? நாயக்சரில்லேயாயின் கொத்துவேலே பார்த்தது யார்? அரசனுயிருந்தது யார்? சேனுதிபதியா யிருந்தது யார்? நாஸ்திகப் பெரியாரா யிருந்தது யார்? ஆஸ்தீசப் பெருமானு யிருந்தது யார்? நாயக்கரே என்று சொல்ல வேண்டும். இவரில்லாமல் இச் செயல்சள் நடைபெறவில்லேயென்பது ஸ்பஷ்டம். செயல்புரிபவரில்லாதபோது செயலுக்குப் பெயர் எது? செயல் எப்படி நிசழும்? இந்த நாஸ்தீக முனிவர் இங்குதான் தத்தளிக்கிருர். மேற்கூறி வந்த நியாயந்தான் கடவுளேயன்றி செயலுக்கு பொருளில்லே யாதலின் கடவுளே உண்மைப் பொருளாகவும், நிசழும் செயல்கள் பொய்ப் பொருளாசவும் கொள்ளல் வேண்டும். அப்படிக் கொள்ளும்போது செயல்கள் கடவுளாவதில்லே. சடவுளுடைய தத்துவங்களே செயல்களாக கொள்ளப்படுகிற தென்றறியக் கடவர். நிற்க,

என்கைகள் என்னில் நின்றும் ஒரு கூருயிருக்க எப்படி அவற்றை "நான்" என்று சொல்லிக்கொள்ள முடியாதோ, இன்னும் நாயக்கர் பலதொழில் புரிபவராயிருக்க கொத்தனுர் என்று மாத்திரம் சொல்லிக்சொள்ளக் கூடாதோ, அவ்வாறே கடவுள் சகல காரியங்களுக்கும் கர்த்தாவாயிருக்க சிருஷ்டி

குணத்தை மாத்திரம் ஏற்கும் "பிர்ம்மா" என்னும் பெயரை கடவுளாக எப்படி இயற்றுதல் பொருந்தும். அப்படி அதை ஏற்றுக்கொண்டால் மற்ற குணங்கள் யாருக்குடையது? அக் குணங்களை யார் கழுத்தில்கட்டுவது? கடவுளுடைய பூரணத் தன்மைக்கு குறைவு ஏற்படுகிறதல்லவா? ஒவ்வொரு செய லுக்கும் ஒவ்வொரு கடவுள் சிருஷ்டித்தால் இவர் மதத்தினர் வணங்கும் எண்ணிக்கையற்ற கடவுள் தோன்றும். அதையும் இவர் மறுத்து செயல்களையும், குணங்களையும் கடவுளென்று பெரியார்கள் சொன்னார்கள் என்றுசொல்லுகிறார். அப்படியே செயல்களையும், குணங்களையும் வேறு பெயரைக் கொண்டு அழைக்காவிட்டால் கடவுள் நாஸ்தியாய் முடிந்துவிட்டது. இவரின் அறிவே அறிவு. இங்கேதான் இவர் சுயரூபத்தில் வந்துள்ளார். நாம் முன் ஸ்தாபித்துள்ள உதாரணங்களினால் செயல் நிகழும் பொழுது கர்த்தா இல்லாமல் நிகழ்வதில்லை, அப்படி நிகழினும் கர்த்தாவின் குணமே யொழிய கர்த்தாவேயல்ல. இவைகளையுணர்ந்து நமது நாயக்கர் சாந்தி யடைந்தால் மிக்கநல்லது. நாம்ஒவ்வொரு விஷயத்தையும் எடு த்து அலசிப்பார்த்து பதில் கூறினால் இதுஓர் பெரிய புத்தக மாய் முடியும். ஆகவே குறிப்பாகவே சொல்லிப்போகிறேன். முஸ்லீம்கள் வணங்கும் கடவுள் பூரணத்தன்மையோடுகூடிய ஒரே கடவுள். அவர்தான் எல்லாத்துக்கும் பெரியவர் என்று அவரை "அல்லாஹு அக்பர்" என்று அழைக்கிறார்கள். ஹிந்துக்கள் கடவுளின் ஒவ்வொரு தத்துவங்களுக்கும் ஒவ் வொரு கடவுளை சிருஷ்டித்துக்கொண்டு கடவுளுக்கு அபரி- பூரண தோஷத்தை கற்பித்து விட்டனர். ஆனால் ஹிந்துக் களில் தன்னை அறிந்த ஞானிகள் கடவுளுக்கு பூரணத் துவத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். நமது நாயக்கரோ செயல் களும், குணங்களுமே கடவுளாக கற்பிக்கப் பட்டிருப்பதாக வும், உண்மையில் செயலையன்றி கடவுளுக்குப் பொருளில்லை

யென்றும் முடித்து விட்டார். இப்போது நாயக்கர் வாதப் படி சமயோசிதமாய் நிகழும் செயல்களே-கடவுள். ஆதலால் கடவுள்என்ற ஒருதனிப்பொருள் இல்லையென்று இவர்முடிவு கூறுகிறார். இப்பொழுது இவரை நாம் நாஸ்தீக முனிவர் என்றழைக்கிறோம். நாம் முனிவர் சொற்களுக்கு மாருகக் கூறுவது யாதெனின் :- கடவுள் ஒன்றே உள்ளது என்றும் மற்ற நிகழ்ச்சிகள் யாவும் அவனன்றி இல்லையாயினும் அவை களே அவனல்ல வென்றும் ஸ்தாபித்துள்ளோம்.

## V வது அத்தியாயம்.

இன்னும் "கடவுள் ஆதியில்லாதது, அந்தமில்லாதது, ................அப்படிப்பட்ட ஒன்று இருப்பதாக நம்பவேண்டு மென்று சொல்லுவதாகச் சொல்லுகிறார்".

அதை நாமும் அப்படியே ஒப்புக்கொள்ளும்படிக்கும், அப்படி ஒப்புக்கொண்டு பக்தி வைக்காவிட்டால் ஒருபோதும் நீர் மோக்ஷவீட்டையடைய முடியாதென்று பின்னும் வற் புறுத்திக் கூறுகிறோம்.

இவர் (நாயக்கர்) குழந்தைப்பருவத்தில் (பல்முளைக்காதி ருக்கும்போது) அதாவது பால்குடிபருவத்தில் கண்டிப்பான பதார்த்தத்தை சாப்பிடக் கூடாதென்றும், அப்படிச் சாப் பிட்டால் இவரின் அவயவங்கள் ஏற்றுக்கொள்ளாதென்றும் நன்மையைச் சொன்னால் இவர் ஒப்புக்கொண்டுதானாக வேண்டுமல்லவா ?

முதலாவதாக "பக்தி" கடவுள் ஒருவர், எங்குமுள்ளவர், எப்பொழுதுமுள்ளவர், ஆதியில்லாதவர், அந்தமில்லாதவர், வியாபி, அவர் இந்த சிற்றறிவால் உணரப்படும் கண்டப்

பொருளைவிட்டும் புறம்பானவர், அவர் பூரண அறிவுள்ளவர், அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர், அவரே எல்லா வற்றையும் அழிக்கவல்லவர், அவரே நன்மை மரணத்துக்குப் பின் எழுப்பி நன்மைக்காக சன்மானமும், தீமைக்காக தெண் டனையும் விதிப்பவர் என்று நம்பவேண்டும். இந்த நம்பிக்கை மூடநம்பிக்கையல்லவா? என்று நமது நாயக்கர் கேட்கிறார். வாஸ்தவந்தான், மூடநம்பிச்கையே. நமக்களிக்கப்பட்டிருக் கும் அறிவும், கருவிகரணங்களும் மேற்கண்ட கடவுள் லெக்ஷ ணத்தை சாட்சியாய தெரிந்துகொள்ள ஆரம்பமாக சக்தி யற்றிருப்பதால், ஆரம்பத்தில் அக்கடவுள் லெக்ஷணங்களை நம்பி பக்திவைத்து சரியை, கிரியையாதிகளுடன் யோகஞான சாதனை விளக்கத்தால் அவைகளை உண்மையென நிச்சயப் படுத்திக்கொண்டு சாந்தியடைவதே முக்தி எனக் கருதப்படு கிறது. அவ்வாறின்றி அவ்விலக்ஷணங்களோடுகூடிய கடவுளை கையில் பிடித்துக் கொடுக்க எம்மாலும், இன்னும் யாராலும் முடியாதென்பதை உணரக்கடவர்.

## VI-வது அத்தியாயம்.

பின்னும் நாயக்கர் சொல்லுகிறார்:— சங்கராச்சாரியார் "அஹம் பிரம்மம்" (நானேகடவுள்) என்று கூறினார் என்றும் அதற்காக சைவர்கள் தானே கடவுளென்னும் பாதகத்தவர் ஒன்று தண்டிப்பதுமுண்டு" என்கிறார். இதை விசாரிப்ப தில் தான் மிகமிக விசேஷங்களிருக்கின்றன. சங்கராச்சாரி யார் சொன்னதுபோலவே முஸ்லீம்களில் மன்சூர் ஹல்லாஜ் (றஹ்) 'அனல் ஹக்' நானே கடவுள் என்று சொன்னதினால் அக்காலத்திலுள்ளவர்கள் அவரைக் கொன்று போட்டார்கள். ஆனால் இவர்கள் 'நான் கடவுள்' என்றதில் நான் என்பதற்கு என்ன கருத்து அல்லது எதை நான் என்று சொன்னீர் களென்று கேட்டுத் தெரிந்தார்களில்லை. நாம் இதின் 1-வது

அத்தியாயத்தில் சொல்லியுள்ளபடி ஒருவன் கடவுளை அறிய விரும்பினால் அவன் தனக்கு அதிசமீபத்திலுள்ள தன்னையே முன்னதாக அறியவேண்டுமென்றும், அப்படி தன்னை அறிந்தால் தன் தலைவனை அறிந்தான் என்றும் சொல்லியுள்ளோம். அதற்கிணங்க,

இப்போது 'நான்' என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொள்ளுகிறார்களே, நான் என்று எதைச் சொல்லிக்கொள்ளுகிறார்களென்று ஒருவனைக்கேட்டால் (1) அவன் தன் உடலைத்தான் "நான்" என்று சொல்லுவதாக வைத்துக் கொள்ளுவோம். இது பொருத்தமற்றதாம். ஏனென்றால் பிரேதத்திற்கும் உடலிருக்கிறது. மேலும் உடல் மாத்திரம் சாதிப்பதொன்றுமில்லையாம். பின்னை எதுவெனில் (2) "நான்" என்பது எனது மெய், வாய், கண், மூக்கு, செவிகளால் கிரகிக்கப்படும் சப்த, பரிச, ரூப, ரச, கந்தங்கள் என்கின்றான். இதையும் ஆராய்வாம்.

(1) ஜாக்கிராவஸ்தையில் (ஆலம் அஜசாம்) இவ்வுலகின் கண் நிகழும் சகல காரியங்களையும் மெய், வாய், கண், மூக்கு, செவிகளின் உதவிகொண்டு ஸ்பரிசித்தல், ருசித்தல், பார்த்தல், முகர்தல், கேட்குதல் முதலிய சகல விஷயத்தையும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். இந்த பஞ்ச இந்திரியங்களாலேயே நான் என்று சொல்லக்கூடிய தன்மை ஏற்படுதலால் இந்த ஐம்புலன்களையே நான் என்று சொல்லுகிறான். இதையும் விசாரிப்பாம். இப்போது புலன்களில் ஒன்றாகிய சப்தத்தை எடுத்துக் கொள்ளுவோம். (a) நான் ஒரு இராகத்தைக்கேட்டுக்கொண்டிருக்கிறேன், என் அறிவானது அந்த இராகத்தில் வியாபித்து இராகவடிவாய் நிற்கிறது. அப்போது 'நான்' என்பது இராகமேயாம். (b) இன்னும் நான்

ஓர் அழகிய ரூபத்தைப் பார்க்கின்றேன். அப்படி பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது என் அறிவானது அந்த ரூபத்தின் வடிவத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. அப்போது 'நான்' என்பது ரூபமேயாம். (c) இன்னும் நான் ஒரு சுவையான பழத்தை சாப்பிடுகிறேன். அப்போது என் அறிவானது அச்சுவையின் ரூபத்தை எடுத்துக் கொள்ளுகிறது. அப்பொழுது 'நான்'என்பது சுவையேயாம். இப்படியே உணரப்படுகிற ஒவ்வொரு சமயங்களிலும் தனக்கு அன்னியமான இராகத்தையும், அழகு ரூபத்தையும், நற்சுவையையும் ஏற்றுக்கொண்டு அறிவு அறிபடுபொருளாகி விடுகின்றன.

ஜமீம்ல மஅஷூக் அஸ்த் ஆஷிக் பார்தயே
ஜிந்தஹ அஷூக் அஸ்த் ஆஷிக் முர்தயே (மஸ்னவி)

சகலமும் இச்சிக்கப்படு பொருளாகின்றன, இச்சிக்கிறவன் திரை மறைவிலிருக்கிறன். ஆகவே இச்சிக்கப்படு பொருள் உயிருள்ளதாயும், இச்சிக்கிறவன் மரித்துவிடுகிறன், ஆகலின்வ இச்சிக்கப்படுபொருளே மீதியாயிருக்கின்றன.

மேலும் தினசரி விவகாரங்களில் நமது அறிவு எண்ணிக்கையற்ற விஷய ரூபமெடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே எனக்கு அன்னியமான பொருட்களை நான் என்று எப்படி ஏற்றுக்கொள்ளுதல் சாலும். இதல்லாமலும் நான் தூங்கும் போது இந்தபொறி புலன்கள் ஒடுங்கிவிடுகின்றனவே.

(2) சொற்பனம் (ஆலாம்மிதால்)

இந்த சொற்பனவஸ்தையிலாவது 'நான்' என்பது சித்திக்கிறதா ? பார்ப்போம்:— இந்த சொற்பனவஸ்தையில் வெளிப்புலன்கள் ஒடுங்கிவிட்டாலும், உட்புலன்கள்—மனம் விழித்திருக்கிறது. இந்த சொற்பனந்தான் உலகத்தைக்

கடவுள் எப்படி நடத்துகிறார் என்றும், அப்படி எல்லாம் நடத்தியும் தான் பற்றற்று எப்படி சாக்ஷாத் கடவுளாயிருக்கிறார் என்றும், இன்னும் மனிதன் கடவுளின் பிரதிநிதியாயிருக்கிறான் என்றும் விளங்கிக்கொள்ள அத்தாட்சியாயிருக்கிறது. அதனை விளக்குவாம்.

நான் தூக்கத்தில் ஓர் கனவு காண்கிறேன். அதாவது நான் சென்னையிலிருப்பதாகவும் அதன் தெருக்களில் ஒன்றாகிய அங்கப்ப நாயக்கன்தெருவழியே நான் சென்றுகொண்டு இருக்கும்பொழுது அந்த தெருவிலுள்ள ஒருவீடு நெருப்புப் பற்றிக்கொண்டதாயும், அந்த எரிகிற வீட்டிலிருந்துகொண்டிருந்த 4 மனிதர்களில் இருவர் நெருப்பைவிட்டும் தப்பிக்கொண்டதாயும், மற்ற இருவர் நெருப்பில் அகப்பட்டுமடிந்து போனதாயும் கனவுகண்டு விழித்துக் கொண்டேன். இப்போது இதில் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

(1) நான் சென்னைக்குப்போகவுமில்லை.

(2) சென்னைநகர் என்னிடம் வரவுமில்லை.

அப்படியானால் என்ன நிகழ்ந்தது? என் மனமானது என் மனோவிருத்தியால் சென்னைநகரை சிருஷ்டித்துக்கொண்டது. இதில் யாதொரு சந்தேகமுமில்லையல்லவா? பின்னர் தனக்குள்ள (1) பின்னசக்தி-தனக்கு வேற்றுமையாகத்தோற்றுவிக்கும் சக்தி (உதாரணமாக : மரமும் பறவையும்போல). (2) அபின்னசக்தி—தனக்குள்ளேயே வியாபித்துத் தோற்றுவிக்கும் சக்தி (உதாரணமாக : மரமும் கிளையும்போல) இப்போது அபின்னசக்தியின் வழியே தான்எல்லாமாய் இருந்துகொண்டும், பின்னசக்தியின்வழியேதான் அவ்விவகாரங்களில் பற்றில்லாமல் தான் எல்லா நடவடிக்கைகளுக்கும் சாட்சியா

யிருந்துகொண்டு நெருப்பில் அகப்பட்டுக்கொண்டு துன்ப்மடைந்தவர்களுடையதுன்பத்தை தான் அனுபவிக்காமலும், அந்நெருப்பில் நின்றும் தப்பியவர்களுடைய ஆரோக்கியத்தை தான் அனுபவிக்காமலும், வேருகயிருந்து பற்றற்று நின்றிருக்கிறது. இப்போது இந்த கன உலகில் வெளிப்புலன்கள் ஒடுங்கிவிடவே மனம் மாத்திரம் பாக்கியா யிருந்திருக்கிறது. இப்போது நான் ஒருவனுயிருக்க, நான் மன மாயையோடு கூடி நானே உலகாய் விரிந்து அபின்னுசக்தி வழியாக நானே சென்னை நகராகவும், அங்கப்ப நாயக்கன் தெருவில் நிகழ்ந்த காட்சிகளும் நாஞகவும், ஆனல் பின்னுசக்தியின் வழியே அங்கு நடைபெற்ற சம்பவங்களில் பற்றில்லாமல் வேருய் சாட்சியா யிருந்திருப்பதும் நாஞகவும் நன்கு புலனுகின்றதல்லவா? இப்பொழுது நானே 'எல்லாமாய்' தோன்றி நின்றேன். அப்படியிருந்தும் நான்வேருக (அல்லவுமாய்) சாட்சியாய் பற்றற்று நின்றிருக்கிறேன். மேற்காட்டிய எல்லா சம்பவங்களுக்கும் நானே காரணபூதமும், என்னைத் தவிற வேறென்றுமில்லாததுபோல, கடவுளே எல்லாமாய், அல்லவுமாய் நிற்றலை கவனித்தல் அவசியம். நிற்க, மனம் என்பது மாயை $\frac{1}{1}$ அறிவு; மாயையோடுங் கூடிய அறிவெனப்படும். கடவுக்கு எப்படி அலை இயற்கையோ, அவ்வாறே மனதுக்கு எப்பொழுதும் சலித்தல் இயற்கையாம். இதுபோலவே கடவுளிடத்திலும் மாயை இயற்கையாகவே யிருந்துகொண்டிருக்கிறதெனத்தெரிந்து கொள்ளவேண்டும். மனம்தனித்து நின்றுலும் சலனம் அதற்கு எப்படிஇயற்கையோ அவ்வாறே பிரம்மம் தனித்துநின்றுலும் அதனிடத்து மாயை இயற்கையாயுள்ளதெனத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்த மனதுக்குப் பெயர் (பர்ஜக்) என்று சொல்லுவதுண்டு அதாவது-நடு-ஸ்தானம் வகிப்பதெனப் பொருள்படும்

எப்படி எனின்—இந்த மனம் சலனத்தை விட்டிருக்கும் பொழுது அதாவது மாயை விட்டொழித்திருக்கும்பொழுது சுழுப்தியில் 'அறிவேன்று'ம் 'சச்சுதாநந்தக்' கடவுள் என்றும் இதே ஐம்புலன்களோடு தொழில்புரியும்போது ஜாக்கிரத்தில் உலகென்றும், மாயையென்றும் பெயர்பெற்றிருக்கிறது. நம்முடையமனம் தாமத குணத்தோடுங்கூடியதால் நாம் காணும் சகு உலகு ஓர் நிலையற்ற வரம்பற்ற ரூபத்தைக் காண்கிறோம். ஆனால் பிரம்மனிடத்தே சத்துவகுணம் அமைந்திருத்தலால் ஓர் நிலையோடும் வரம்புக்குட்பட்டும் நடப்பது சண்கூடு ஆகவே தனி அறிவாயிருந்த பிரம்மம் தனக்கு இயற்கையாயுள்ள மாயையோடுகூடி உலகாய் பிரிந்திருப்பதை மேற்காட்டிய அத்தாக்ஷிகளால் விளங்கிக்கொள்ளலாம். இன்னம் மனமானது உலகத்தைசிருஷ்டித்தபின்னரும் முன்னிருந்தபடியே கூடுதல்குறைவின்றி இருப்பதேபோல்கடவுள் உலகத்தை சிருஷ்டித்தபின்னரும் கடவுள் முன்னிருந்தபடியே இருக்கிறுரென்பதையும் அறியக்கடவர். இதனுல் நாம் முன்சொல்லிவந்தபடிக்கு கடவுளை ஒருவன் அறியப்புகு முன் தன்னையே முன்னதாக அறிந்துகொள்ளவேண்டும். மனிதன் கடவுளுடைய பிரதிநிதியாயிருப்பதுபற்றி கடவுளுக்குள்ள சகல தத்துவங்கொண்டு மனிதன் அமைக்கப்பெற்றிருக்கிறுன். இதனுலேயே சிலமனிதர்கள் மனித உருவத்தை கடவுளாகக்கொண்டார்கள். ஆனுல் இவர்கள் தாங்கள் யார்? தங்களுக்குள்ள தத்துவம் யாது? என்பதை கொஞ்சம் நிதானித்து யோசித்தார்களில்லை. இன்னும் நம்மிடத்தே காணப்படும் 'மனம்' தான் இவ்வுலகத்தில் யாத்திரை செய்ய வந்திருக்கிறது. நினைக்கும் சக்தியுடையது இந்த 'மனமே' இந்த நினைவைக் கொண்டே கடவுளை தியானித்தல் சாலும், அப்படிக் கடவுளைத் தியானிக்கிறவன் தியானிக்கப்படுபொருளாய் நிற்பதற்கு இந்த மனமே காரண

மாய் நிற்கின்றதென்பதையும் இதுவே மோக்ஷ வீட்டை அடைவதற்கு மூலப்பொருளாயிருப்பதையும் அறியக்கடவர். இந்த சொற்பனவஸ்தையும் ஜாக்கிரத்தைப் போலவே என்னோடு மாயை சம்பந்தப்பட்டு 'நான்' வேறு பொருளில் மறைந்து எனக்குள்ள உண்மைமையை மறைத்துவிட்டபடியால் இந்த சொற்பனத்தில் காணப்படும் மனதையும் 'நான்' என்று சொல்லமுடியாதென்பது தெளிவு. இதன்பின் சொற்பன நிலைமைக்குமேல் ஆழ்ந்த நித்திரையிலாகி சுழுப்தி அவஸ்தையைஅடைந்து விடுகின்றேன்.

## (3) சுழுப்தி (ஆலமே ஜபரூத்)

நான் நன்றாய் தூங்கி விழித்தபிறகு, நான் சுகமாய்த் தூங்கினேன் என்று சொல்லுகிறேன். என்னுடைய புலன்கள் தொழிலற்றும் மனமாயை ஒடுங்கி, சுழுப்தி அவஸ்தையில் அனுபவித்த சுகாநுபவம் நான் விழித்தெழுந்து என் பொறிபுலன்கள் தொழிலை ஏற்கும்போது வெளியாக்கப் படுகிறது. இந்த சுழுப்தி நிலையில் எவ்விதமான கூட்டுறவு மில்லாமல் அறிவாகிய ஓர் உணர்ச்சி மாத்திரம் பாக்கியாயிருந் திருக்கிறது. இந்த நிலையில் அறிவும் அறிபவனும் ஒன்றாகி வேற்றுமையற்றிருத்தலால் இதைத்தான் சங்கல்பமற்ற சுத்த அறிவென்று சொல்லவேண்டும். ஆனால் இப்போது சொல்லி வந்த 'சுழுப்தி' யானது மூடச் சுழுப்தியே தவிர அறிவின் சுழுப்தியன்று. இதை அறிவின் சுழுப்தி ஆக்கிக்கொள் வதற்கே யோக நிஷ்டைகள் அவசியம். அந்த யோகம் இரு வகைப்படும். 1. ஹட யோகம். 2. இராஜ யோகம். இவ்விரண்டில் இராஜ யோகம் வேத சம்மதம். ஹட யோகம் வேத சம்மதமன்று. ஆனால் இரண்டினுடைய நோக்கமும் ஒன்றுதான். அதாவது'மனதை'அடக்கி வசப்படுத்துவதாம்.

1 'ஹட்யோகம்' சுவாசத்தைநிறுத்தினல் மனங்கட்டுப படுமென்பதாம். கடல் அலைக்குக்காற்று காரணமாயிருப்பது போல மனதில் அலை உண்டாவதற்கு சுவாசம் காரணமாயிருக் கிறதென்று கருதி சுவாசத்தை அடக்கப் பழக்கி அதன் வழியே மனதை அடக்கப் பழகுகிருர்கள். இதில் மிக மிக அபாயமிருக்கிறது. இதில் அநேகர்மாண்டும் போனுர்கள். ஹட்யோகத்தைப் பழகுகிறவன் ஓடும் வண்டியை நிறுத்து வான் வேண்டி அதன் சக்கிரத்தைப் பிடித்தவனுக்கொப்பா யிருக்கிருன். அதில் எவ்வளவு அபாயமிருக்கிறதென்பதை யாவரும் உணரலாம். ஆனல்;

2 இராஜயோகம் வேத சம்மதம். இதுதான் யாவ ராலும் அனுஷ்டிக்கவேண்டிய வழியாயிருக்கிறது. இதில் அபாயமில்லை. தியான முறையால் மனதை அடக்குவதாம். 'தியானம்' என்னும் சவாரியை 'மனம்' என்னும் குதிரைமேல் தூக்கிவைத்து எப்பொழுதுமே இந்த சவாரியை கீழே தள்ளாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் தியானத்தை சுமக்கிறவேலை இம்மனதுச்கு ஏற்படுகிறபோது தியான ரூபத்தைதான் பெற்று விளங்குவதை கவனித்தல் வேண்டும். இந்த யோகத்தை அனுஷ்டித்து நடக்கும்போது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு மனம் சாந்தி அடையும்வகை எய்தி சுழிமுனை நிலைதெரிந்து இரேசகம், பூரகம், கும்பகம்முதலிய அப்பியாசங்களோடு பிராணுயாமம் தவராது செய்துவந்து இரண்டற்ற நிலையில் சமாதியாய் நிற்றலே அறிவின் சுழுப்தியை அடையும் வழியெனப்படு மென்பதை அறியக்கடவர். இந்த சங்கல்பவிகற்பமற்ற "அறிவின் சுழுப்தியில்" அறிவை சங்கராச்சாரியார் 'நான் பிரம்மம்' என்று சொன்னுர் என்று அறியக்கடவர்.

தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் காண்பானேல்
பின்னை அத்தலைவன்தானாய் பிர்ம்மமாய் வீற்றிருப்பன்
உன்னை நீ அறிவாயானால் உனக்கோரு கேடுமில்லை
என்னை நீ கேட்கையாலே ஈதுபதேசித்தேனே. கைவல்லியம்

என்ற செய்யுளை இதில் காணும் விஷயங்களுக்கு ஆதாரமாய் வைத்து ஆராய்ந்து பார்க்கவும்.

இந்த சுழுப்தி நிலையில் 'நான் கடவுள்' என்று சொல்லுதல் கூடுமா? கூடாதா? எனின்

உள்ளது 'கடவுள்' ஒன்றே அவரை

வேதங்கள் 'அவன்' என்றும் (நுபுல்லத்து)
ஞானி 'நான்' என்றும் (விலாயத்து) சொல்லுவான்

ஒருவன் தான் கண்டது கேட்டது சகலத்தையும் மறந்து விடலாம். ஆனால் தன் உணர்ச்சியை தான் ஒரு போதும் மறக்கமுடியாதென்பது யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும். ஆகவே ஞானியானவன் தனது அருள் வெளிக்குளே சகலத்தையும் அடக்கி இளைதுணை வைக்காது அகண்ட ஆகாரவடிவினனாய் நிலை தவறாது நின்று யோக சாதனையில் சதா மன்சூராக இருத்தல் கடமையாயிருக்கிறது. இதுவும் சாதனை நிலையேயன்றி சாத்திய நிலையன்றென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்நிலை எய்திய ஒவ்வொருவரும் அப்படியே சாதிப்பது அவசியமாயிருக்கிறது. இந்தசாதனை தியான நிலையே தவிர வாய்விட்டுச் சொல்லுவது தடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஞானி எதை 'நான்' என்று சொல்லுகிறானோ இன்னம் எந்த நிலையிலிருந்துகொண்டு சொல்லுகிறானோ அதை

அறியாது பாமரஜனங்களும் 'நான் கடவுள்' என்று சொல்லத் துணிந்துவிடுவார்கள். இந்த இடமானது பக்தனுடைய முடிவான எல்லையாயிருக்கிறது. பக்தனுக்கு ஆண்டான் அடிமை இரண்டு வேண்டும் அல்விரண்டின்றி அடிமை ஆண்டானை பூஜித்தல் சாலாது. இந்த வேற்றுமையற்று ஒன்றித்தலின் இரகசியம் இந்த எல்லையில் தானிருக்கிறது. இந்த எல்லையேதெரியாத மூடர்களும் 'நான் கடவுள்' என்று சொல்லிவிடக்கூடுமாதலால் எந்த ஞானியும் வாயினல் சொல்வதைத் தடுக்கப்பட்டிருக்கிறதென்றறியவும். இன்னம் கடவுளுக்கு நிலை மூன்றென வகுத்திருக்கிருர்கள். அவைகளாவன:- (1) அநாதி, (2) ஆதி, (3) சோதி. எனப்படும். இப்போது முதலில் சொன்ன அனுதியானது துரியநிலையில் கடவுளுக்கு எந்த இலக்ஷணமோ அதேஇலக்ஷணத்துக்குத் தான் அநாதியென்று சொல்லப்படும். இந்த நிலையைத்தான் நாயக்கர் ஆதியில்லாதது, அந்தமில்லாதது, அரியப்பட்ட, புரியப்பட்ட, சங்கதியெதுவுமில்லாதது யென்று குறிப்பிடுகிருர். இந்த துரிய நிலையானது ஏகம் வகுத்துச்சொல்ல ஏவாதது நாமரூபமற்றது. இந்த இடத்தில் தான் மஹாத்மா புத்தர் இடம் கடவுள் உண்டா? இல்லையா? என்றதற்கு இரண்டுச்கும் மௌனஞ்சாதித்துள்ளார். ஏனென்றுல் உண்டு என்ருல், இதில் 3 கேள்விகள் நிகழ்கின்றன;

1. எங்கே உண்டு? (இடம்)
2. எப்போது உண்டு? (காலம்)
3. எப்படி உண்டு? (பொருள்)

பொருள், இடம், காலத்தை அமைத்து சொன்னலொழிய இவ்வுலகத்தவர் அறிந்துகொள்ளமுடியாது.

ஏனென்ருல், இவ்வுலக சிருஷ்டிகள் சகலமும் இம் மூன்றினுக்குள் அடங்கியே இருக்கின்றன. மேற்கண்ட பொருள், இடம், காலம், ஆகிய மூன்றினுக்கும் அதீதமான 'ஏகத்தை' ஒருபொருளில் அல்லது ஒரு இடத்தில் அல்லது ஒருகாலத்தில் அடக்கிச்சொல்ல எப்படி முடியும்? அது ('பரப்பிரம்மம்') ஏகமானதால் எங்கும் வியாபித்துள்ளதும், யாண்டுமுள்ளதுமாகலின் மேற்கண்டபொருள், இடம் காலத் துக்குள் அடக்கிச்சொல்லுவதானுல் பிரம்மம் அபரிபூரண தோஷத்தை அடையும். இந்த அநாதியான துரியநிலையின் சங்கதியை நாயக்கர் எடுத்துக்கொண்டு பிரலாபித்து இப்படிப் பட்ட அறியமுடியாத கடவுளைவிட அறிந்த அன்பே மேல் என்கிருர். இவர் இங்கு சொல்லும் அன்பின் நோக்கமே புரிய வில்லை. கடவுளுக்கு அன்பு இல்லையென்று ஒருவரும் சொல்ல வில்லையே. அது அவருடைய எண்ணிக்கையற்ற சத்குணங் களில் ஒன்றெனவே எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இப்படி அறியமுடியாத துரிய நிலையிலுள்ள அநாதியான கடவுள் உண்டா? எனின் 'உள்ளது போகாது' 'இல்லது வாராது' என்றநியாயத்தான் மனிதன் துரிய நிலையைவிட்டும் சுழுப்திக்கு இறங்கியவுடன் ,நான்' உண்டு, என்கிற 'ஆதி' அறிவு தோன்றுகிறது. பானையில் உண்டானுல் அகப்பையில் வரும் என்பார்கள். "இல்லது இல்லதே,–உள்ளது உள்ளதே" என்ற நியாயத்தான் துரியநிலையிலுள்ள ஏக"அறிவே" சுழுப்தி யில் 'நான்' என்று தலைகாட்டிற்று என்று அறியக்கடவர். துரியம்நாஸ்தியாயின், சுழுப்தியும் நாஸ்தியே அப்படிக்கின்றி துரியநிலையில் (அநாதியில்) உண்டாயிருந்ததனுலேயே இப் போது சுழுப்தியிலும் உண்டு என்று தலைகாட்டிற்று. பிறகு இந்த ஆதியென்ற அறிவே இயற்கையான மனமாயையோடு கூடி உலகாய் விரிந்திருப்பதை தெரிந்து கொள்ளுகிருேம். இப்போது துரியநிலையில் "அனுதியாயிருந்த" பரப்பிரம்மம்

சுழுப்தியில் 'ஆதியாகிய' சச்சுதானந்தக்கடவுளாய்

சொற்பனம் } ல் சோதியாய் உலகாய் விரிந்திருக்கிறது
ஜாக்கிரம் }

இந்த முறைப்படி கவனித்தால் அறிவே உலகாய் விரிந்து இருப்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். இந்த விஷயங்களை முதலாவதாக ஆரம்பத்தில் விளங்க முடியாதிருப்பதால் முதல் முதல் பக்தி கொள்ளல் அவசியமென்று பெரியோர்கள் சொன்னார்கள். ஆரம்பத்தில் இந்த நம்பிக்கை மூடநம்பிக்கையாயிருந்தாலும் தெளியத்தெளிய சிவமாமே என்றபடிக்கு உறுதி ஏற்பட்டுவிடும். கிருஸ்தவர்களுடைய இஞ்சீல் வேதத்தின் முடிவு "நீ நம்பு" என்பதாம். முஸ்லீம்களுடைய புர்க்கான்வேதத்தின்படிக்கும் ஆமன்து'பில்லாஹி-அல்லாவை' நம்பினேன் என்பதாம். இன்னும் இதர மதஸ்தர்களுடைய ஆரம்பமாகிறது 'நம்பிக்கை' அல்லது பக்தியேயாம். ஆகவே நமது நாயக்கரும் ஆரம்பத்தில் நம்பி சொல்லப்பட்டிருக்கும் வழிப்படி நடந்துவந்தால் நம்பினதை உண்மையென்றே சாணுவார். இதில் சந்தேகமில்லை. ஒருவன் உண்மையான ஒரே கடவுளைப்பற்றி நம்பிக்கைவைக்கவில்லையாயின் அவனது மனம் ஓர் பாழுங்கிணற்றுக்கு ஒப்பாயிருக்கிறது. இதில் ஊற்றுக்கண் கிடையாது. நல்ல அமிர்தம் சுறப்பதில்லை இதைத் தோண்டத்தோண்ட குப்பையும் செத்தையும் இன்னும் பயிரும் பட்டையுந்தான் கிடைக்கும். ஆனால் பக்தனுடைய மனமானது நல்ல ஊற்றுக்கண் உள்ள கிணற்றுக்கு சமமாகயிருக்கிறது. 'கடவுள்வாசஸ்தலம் பக்தனுடையமனம்' என்று பெரியார்கள் சொன்னதையும் கவனித்தல் அவசியம். பக்தனுடைய மனதில் எப்பொழுதும் அருள் சுறந்து கொண்டிருக்கு மென்பதை இவர் அறிந்து இவரும் அப்படியே நம்பிக்கைவைப்பாராக.

## VII வது அத்தியாயம்.

## இயற்கையே கடவுளா?

நாயக்கர் செய்துள்ள பிரசங்கத்தில் 10 வருஷங்களுக்கு முன் நடைபெற்ற சைவர்கள் மகாநாட்டில் "இயற்கையே" கடவுளென முடித்துக் கொண்டதாகவும் சொல்லுகிறார். இதையும் கவனிப்போம்.

நான் ஒருமேசையின்பேரில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். (1) எறும்புக் கூட்டத்திலிருந்தும் ஓர் எறும்பு வந்து எழுதிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டு தன் இனத்தவரிடம் போய் "நான் ஒரு 'எழுதுகோல்' எழுதிக்கொண்டிருக்கக் கண்டேன் என்றது. இந்த எறும்பின் அறிவு மேற்சொல்லிய இயற்கைவாதியின் அறிவுக்குச் சமானமாயிருக்கிறது. ஏனென்றால் இந்த இயற்கைவாதிகள் இந்த பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் வஸ்துக்கள் உற்பத்தியாவதை நம்பி இதற்கு மேலொன்றுமில்லையென்று நினைத்து இயற்கையே கடவுள் என்றார்கள். (2) பின்னர் இரண்டவதாக முன்னர்வந்த எறும்பைவிட விவேகமுள்ள எறும்பொன்று நான் எழுதிக்கொண்டிருப்பதை பார்த்துவிட்டுப்போய் தன் இனத்தவரிடம் சொன்னதாவது: அந்த எழுதுகோல் எழுதவில்லை ஆனால் அந்த எழுதுகோலை ஒருகை பிடித்திருக்கிறது அந்த 'கை' தான் எழுதுகிறதென்று செப்பிற்று. இது கிரகவாதிகளுக் கொப்பாயிருக்கிறது. இந்த கிரகவாதிகள் நவக்கிரகங்கள் சுற்றிவரும்போது கிரகங்களில் ஒன்றை மற்றொன்று சந்திக்குங்கால் வஸ்துக்கள் உற்பத்தியும், அவைகளுக்கு விதிகளும் அமைக்கப்பெறுகின்றன. (இதன்உண்மை ஜோதிட சாஸ்திரத்தில்—நுஜூமில்—காணலாம்) இதை முன்னிட்டு இந்த கிரகங்களாலேயே சகல சிருஷ்டிகளும் அமைக்கப்பெறுகிறதென இந்த கிரகங்களையே 'கடவுள்' எனநம்பினார்கள்

இவர்கள் கிரகவாதிகள்என்பபடுவர் (3)பின்னர்மூன்றுவதாக அதைவிட அதிவிவேகமுள்ள வேறோர் எறும்பு வந்து நான் எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு தன் இனத்தவரிடம்போய் அந்த எழுதுகோல் ஓர் கை வசமிருக்கிறதாயினும் அந்தக்கையோ, கையையுடைய மனிதனுடைய மனதிலுள்ள நாட்டத்தை வெளிப்படுத்துகிறதாக யிருக்கிறதேயொழிய, எழுதுகோலுக்காவது அல்லது அதைப் பிடித்திருக்கும் கைக்காவது யாதொரு நாட்டமாவது, சக்தியாவது யிருக்கிறதாயில்லை. ஆகவே அந்த மனிதன்தன் நாட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான் என்றது. இதுதான் ஞானிகளுடைய பூராயமான அறிவுக்கு ஒப்பாயிருக்கிறது. இந்த பஞ்சபூதங்களாலான கோளங்கள், கிரகங்கள் வசமாயும் இந்த கிரகங்கள் கடவுளின் நாட்டத்தின் வசமாயும் இருப்பதை ஞானிகள் உணர்ந்தே "எல்லாம் கடவுள் செயல்" என்கிறார்கள். உதாரணமாக :—

நான் ஓர் வீட்டைக்கட்ட நினைத்தால், முதலாவதாக நான் என்மனதில் ஓர் பிளான் (திட்டம்) அமைத்துக்கொள்ளுகிறேன். அப்படி அமைத்த திட்டத்தை காகிதத்தில் வரைந்துகொண்டு சிற்பசாஸ்திரிகளிடத்தில் ஷை திட்டத்தை சாண்பித்து என் நாட்டப்படிக்குள்ள பிளான் பிரகாரம் கட்டிடம்கட்ட உத்திரவிடுகிறேன். அந்த சிற்பசாஸ்திரிகள் கொத்தன், தச்சன் முதலியோர்களைக்கொண்டு கல், மண், மணல், சுண்ணும்பு, மரம் முதலிய சாதனங்களைக்கொண்டும், கட்டிடத்தை பூர்த்திசெய்கிறார்கள். இவ்வாறே கடவுள்தமது நாட்டத்திலுள்ள திட்டத்தை நவக்கிரகங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். அவைகள் அமரர்களுடைய உதவிகொண்டும், பஞ்சபூதங்களைக் கருவிகளாகக்கொண்டும் கடவுளின் நாட்டத்தை பூர்த்திசெய்து வருகின்றன. நம்மால்

ஏற்படுத்தப்படும் சிற்பசாஸ்திரிகள் நம்முடைய பிளானுக்கு பிசகாகவும் சிலசமயங்களில்செய்துவிடுவதுண்டு. ஆனால் கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிரகங்கள் தவறுசெய்வதில்லை அதாவது ஒரு ஆண்பிள்ளை பிறக்கும்நேரத்தில் பெண்பிள்ளை பிறக்கிறதில்லை. அல்லது மனிதவர்க்கம் குழந்தைகள் பெறுங் காலத்தில் நாற்கால்மிருகங்கள் குட்டிபோடுவதில்லை, அல்லது மிருகங்கள் குட்டி போடும்நேரத்தில் பறவைகள் குஞ்சு பொறிப்பதில்லை. இன்னும் இந்த உலகத்தில் தோன்றியிருக்கும் சகல ஜீவன்களுக்கும் இந்த நவக்கிரகங்கள் சுற்றி வரும்போது ஒன்றையொன்று சந்திக்குங்கால் எல்லாஜீவகோடிகளுக்கும் ஒன்றின் விதிபோல் மற்றொன்றுக்கு ஏற்படாமல் வெவ்வேறு விதமாய் ஏற்படுகின்றன. இதைக் கவனிக்கும் போது கடவுளுடைய பூராயமான அறிவின் மகிமையை போற்றுமலிருக்க முடியாது. ஆகையால் மேற்கண்ட ஆதாரப்படிக்கு இயற்கையும் கடவுள் அல்ல, கிரகங்களும் கடவுள் அல்ல, இவைகளை யெல்லாம் ஆட்டிவைப்பவரே கடவுள் என்று கொள்ளல் வேண்டும். நமது நாயக்கர் இனிமேலாகிலும் கடவுளை நம்பி நடப்பாரா? நாயக்கர் தங்கள் ஹிந்து மதக்கொள்கைகளில் ஆபாசமானவைகளைக்கண்டிக்கும் பொழுது நமக்கு யாதொரு வேலையுமில்லை. ஆனால் ஆஸ்திகர்களை கண்டிக்கும்போ நாம் சும்மா வாளாவிருத்தல் முடியாது. இவர் இந்த ஹிந்துமதத்தை புனருத்தாரணஞ்செய்ய நினைப்பாராயின் இது முடியாத காரியம். ஏனென்றால் ஹிந்து மதத்தில் மிக்க ஆபாசக் கொள்கைகள் புகுந்து விட்டன. உதாரணமாக: தீண்டாமை ஆலயப்பிரவேச பாகுபாடு, விதவா விவாஹ மறுப்பு, கடவுள் தத்துவங்களை கடவுளாக சிருஷ்டித்துப் பூஜித்தல், நியோகம்போலொத்த ஆபாசக் கொள்கைகள் முதலியன புகுந்து வேறூன்றி விட்டபடியால் இல்லறவாழ்க்கையோடிருந்து மோக்ஷவீடடைவது சாத்திய

மில்லாமற் போய்விட்டது. இதற்காகவே ஹிந்து ஞானிகள் "துறவறம்" என்பதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். இதுவோ (துறவறமோ) கடவுள் சம்மதமன்று. ஏனென்றால் கடவுளுடைய இயற்கையை கவனிக்கும்போது கடவுளுடைய தத்துவங்கள் ஓய்வின்றி சதா தொழில் புரிவதோடு அருள் கொடையை சொறிந்துகொண்டேயிருக்கின்றன. மேலும் கடவுளுடைய சிருஷ்டிகளில் ஆண் பெண் என்று ஜோடியாக சிருஷ்டிக்கப்பட்டதன் நோக்கத்தை கவனிக்கும்போது இரு பாலாரும் இல்லறவாழ்க்கையைநடத்தி மோக்ஷவீடடைவதே கடவுள் இயற்கை நோக்கமென்று தெரிந்துகொள்ளுகிறோம். "இல்லறமல்லது நல்லறமன்று" என்று பெரியார் சொற்படி இல்வாழ்க்கையிலேயே அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய வைகள் சித்திக்கின்றன. இதை விலக்கி துறவறத்தை அனுசரித்து நடப்பது கடவுளின் சம்மதமல்லவென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். இப்படி இல்லற வாழ்க்கையை நடத்துவதற்கு ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் இஸ்லாத்திலேயே கிடைப்பதாயிருப்பதால் நமது நாயக்கர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டால் மதத்தைத் தூஷணிக்கும் விஷயம் இவருக்கு மீதியாகிவிடும். இதை உற்றுநோக்கி உண்மையில் இறங்கிவிடுவாரென்றுநம்புகிறோம்.

இன்னம் நாயக்கர் கூறுகிறார்; இன்று சிறையிலுள்ள 2லக்ஷம் கைதிகளில் சம்சயவாதிகளோ, நாஸ்திகர்களோ விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் இருப்பார்கள், மற்றை யோர் யாவரும் கடவுள் உணர்ச்சியிலே ஒருவித சந்தேகமும் கொள்ளாத ஆஸ்திகர்களேயாகுர்; ஆகவே அவர்கள் சொல்லும் கடவுள் உணர்ச்சியை மனிதனுடைய நடத்தை யுடன் ஒப்பிட்டுப்பார்த்து வரவு செலவு கணக்கு போட்டு லாப நஷ்டப் பட்டி இறக்கிப்பார்க்கும்படி உங்களைக் கேட்டுக்

கொள்ளுகிறேன் என்று நாயக்கர் சேலஞ்சுசெய்கிறார். இவர் சொல்லும் செயலுக்கு ஆதாரமேயில்லை. எப்படி எனின் ஒருவன் கடவுள் உண்டென்றும், அவர் எங்கும் யிருக்கிறார் என்றும், நம்முடைய செயல்களை கவனித்து வருகிறாரென்றும் மரணத்துக்குப்பின் மனிதர்களை எழுப்பி நன்மைக்கு சன்மானமும், தீமைக்குத் தெண்டனையும் அளிப்பார் என்றும் நம்பி நடக்கிறான். இவன் பாவச்செயல்களைவிட்டும் தப்பி நடக்க வழியுண்டா? அல்லது கடவுளே இல்லையென்றும் நம்மைக் கேட்பவரொருவருமில்லையென்றும், ஒருவருக்கும் பயப்பட வேண்டியதில்லையென்றும், நம்புகிறவன் துற்செயலை விட்டும் நீங்கஹேது உண்டா? இவர் சொல்லும் கூற்றுக்கு அர்த்தமே இல்லையாம். இவர் ஓர் வார்த்தை அலங்காரியே தவிர இவர் சொற்களுக்குப் பொருளில்லையாம். மேலும் மனிதர்கள் பாவஞ்செய்யும் விஷயத்தை கவனிப்போம்.

இன்னம் இவ்வுலகின்கண் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் சகலவஸ்துக்களிலும் இவ்வுலகின்கண் நடைபெறும் சகல காரியங்களிலும் சத்துரு, மித்துரு (Negative & Positive) வென இரண்டுமுரண்பட்ட தத்துவங்களே காணப்படுகின்றன. அதாவது நெருப்பும் தண்ணீரும்போல—இவ்விரண்டு பொருளும் ஒன்றுக்கொன்று விரோதமாயினும் இவை இரண்டுமில்லாமல் இஞ்சின் ஓடுவதில்லை. அதேபோல உலகத்தில் சகல நடவடிக்கைகளிலும் நல்லது—கெட்டது என்ற இரண்டினுக்குள்ளகப்பட்டதாகவே காணப்படும். மேலும், சிருஷ்டிகளை நோக்கும்போது எல்லாம் ஜோடி ஜோடியாகவே படைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக :—
வானம்—பூமி ; ஆண்—பெண் ; சூடு—குளிச்சி ; இரவு—பகல் ; சுகம்—துக்கம் ; நன்மை—தீமை ; நரகம்—சுவர்க்கம், என சகலமும் இரட்டை இரட்டையாக

இருந்துவருவது கண்கூடு. ஆகவே உலகமிருக்கும் வரையில் நன்மையும்—தீமையும், பாவமும்—புண்ணியமும் இருக்கே தீருமென்பது துணிபு. உலகத்தில் பாவங்கள் நடைபெறாமல் தடுத்துவிடுவோமென்பது முடியாதகாரியமாகும். ஏனென் ருல், இவ்வுலகின்கண் சத்துரு–மித்துருவான இரு தத்துவங் களில்லாமல் காரியங்கள் நடைபெற முடியாதாதலினென்க. எப்படி உலகத்தில் குளிர்ச்சி மாத்திரமிருந்தால் சகலமும் குளிர்ந்துபோய் உற்பத்தியிராதோ இன்னம் எப்படி உஷ்ணம் மாத்திரமிருந்தால் எல்லாவஸ்துக்களும் எரிந்துபோய்உற்பத்தி இராதோ அப்படியே உலகத்தில் நன்மைமாத்திரமிருந்தாலும் அல்லது தீமைமாத்திரமிருந்தாலும் உலகம் நடைபெறுதென் அறியக் கிடக்கிறது ஆகவே உலகமிருக்கும்வரைக்கும் நன்ை யும் தீமையும்அவசியமென இவர் உணரவேண்டும். பே நாட்டார் சர்வதேச சங்கம் ஒன்று நிறுவி உலகத்தி சமாதானத்தையே நாட்டுவதாக பறைசாற்றி வந்த இன்றைக்கு என்னவாயிற்றென்று யாவரும் அறிந்திருக்கிற கள். இதன் அஸ்திவாரமே தப்பாயிருந்ததனுல் இச்சங்க இருந்தும் இல்லாமலாகிவிட்டது. நாம் மேற்சொல்லிவந் விஷயங்களினுல் பாவத்தையும் சேர்த்துச் செய்யவேண் மென்று கருத்தல்ல. ஆனுல் பாவம் செய்யாமலிருக்க முடிய தென்பதே கருத்தாகும். இதில்;

'ஆஸ்திகர்' புண்ணியம்செய்தால் மோக்ஷசாதனம் பெற் இன்பம் பெறலாமென்றும், பாவம்செய்தால்நரகத்தி விழுந்து துன்புறுவோமென்றும் நம்புகிறுர்கள்.

நாஸ்திகர்' கடவுளில்லை. கடவுளைப்பற்றிய கவலை யடை வேண்டியதில்லை. நரக—சுவர்க்க மில்லை. அதற்கா பயப்பட வேண்டியதுமில்லையென்றும் நம்புகிறுர்க

மேற்கண்ட இருவகுப்பாருள் எவ்வகுப்பார் பாவம் அதிகம் செயவார்களென்று அளந்து நிறுத்துப்பார்த்து இந்த நாயக்கரே பதில் கூறட்டும்.

ஓர் நாஸ்திகன் தனிவழியே சொல்லுகிறான். பிறர் பயமில்லாத ஓர் யிடத்தில் அன்னிய ஸ்திரியைக்கண்டு துர்ப்புணர்ச்சியை விரும்கிறான் அப்பொழுது அவன் மனம் இருவகையாகப்பிரிகிறது ஒன்று துர்ப்புணர்ச்சியை வற்புறுத்துகிறது. மற்றொன்று சுயமரியாதை நமக்குண்டே அச்செயல் கூடாதென்று தடுக்கிறது. இவ்விரண்டினையும் 'தான்' சர்வாதிகாரியாயிருந்து நிதானித்து நடக்கிறான். இவனுக்குச் சுயமரியாதை எவ்வளவு தூரம் தடுக்க வல்லது?

ஓர் ஆஸ்திகனும் அப்படியே தனிவழியே செல்லும் போது ஓர் ஸ்திரியைக்கண்டு துர்ப்புணர்ச்சிநடத்த எத்தனிக்கிறான். இங்கும் இவனுக்கு மனம் இருவகையாகப்பிரிந்து ஒன்று இப்படிசெய்யநினைக்கிறாய் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார். நீ இப்படிப்பட்ட தீங்கான செயல் செய்தால் மரணத்துக்குப்பின் உன்னை எழுப்பி நரகத்தில்போட்டு வதைக்கப்படும் இன்னம் நீசெய்த தவங்களெல்லாம்பாழாய்ப் போய்விடுமென்று பயமுறுத்தாட்டுகிறது. மற்றொன்று இச்செயலைச் செய்யவேண்டுமென்று தூண்டுகிறது. இவ்விருவரில் யார் கெட்டசெயலை விட்டும் நீங்கிக்கொள்ளுவதற்கு அதிக எச்சரிக்கை இருக்கிறதென்பதை இவரும் இவரைச் சேர்ந்தாரும் கவனிக்கவேண்டாமா? ஆகவே நாஸ்திகர் செயலுடன் ஆஸ்திகர்செயலையும் ஒப்பிட்டுப்பார்த்து வரவு செலவு கணக்குப்போட்டு லாப நஷ்டப்பட்டி இறக்கிப்பார்க்கும்படி இந்தநாஸ்தீகமுனிவரையே கேட்டுக்கொள்ளுகிறேன். கடைசியாக;

## VIII வது அத்தியாயம்.

மோக்ஷம், நரகம், மோக்ஷ நரகங்களைக் கொடுக்கும் கடவுள்கள் ஆகியவைகள் எல்லாம் வெறும் பித்தலாட்டங்கள் என ராமலிங்கஸ்வாமிகள் சொல்லியிருப்பதாக நாயக்கர் கூறுகிறார். இதையும் விசாரிப்பாம்.

(1) கடவுளை பக்திகொண்டு வணங்குபவர்களுக்கு பக்த யோகிகள் (அப்ரார்) என்றும்;

(2) கடவுளையறிந்த(தன்னையறிந்த)வர்களுக்கு முக்தர்கள்(முகாரபீன்)என்றும் அழைக்கப்படும். (முதலாவது கூறியவர்கள் கடவுளில் பக்திவைத்து கடவுளுடைய சகல இலக்ஷணங்களையும்நம்பி அவருக்கு வழிபாடுகள்செய்துவணங்குபவர்கள் இவர்களுக்கு வேதஆதாரப்படிக்கு சிருஷ்டி கர்த்தாவால் மனிதர்களை மரணத்துக்குப் பிறகு எழுப்பி அவர்களை கேள்வி கணக்குகேட்டு தீமையாளருக்கு தெண்டித்தபிறகு அவர்கள் செய்த நன்மைக்காகவும் அவர்களுடைய பக்திக்காகவும் சுவர்க்கம் அளிக்கப்படுகிறது. இது கடவுளுடைய (Decree) முடிவான தீர்மானம். கடவுள் இப்படியே வேதத்தில் வாக்களித்துள்ளதாக இது கடவுளால் அருளப்பெற்ற எல்லா வேதங்களிலும் நிச்சயமாய்க் காணலாம். இந்த உலகத்தை சிருஷ்டித்து இதில் எப்படி சட்ட திட்டங்கள் அமைத்துள்ளாரோ; எப்படி சூரியனைது கிழக்கேஉதித்து மேற்கே அடைய வேண்டுமென்று போட்டுள்ள திட்டம் கடுகளவும் தவறாமல் நடந்துவருகிறதோ அவ்வாறே அவர்சொல்லியுள்ள விஷயம் ஒரு அணுவளவுகூட பிசகிநடக்கக் காரணமில்லை. மேலும் கடவுள் தான் சொல்லும் வேதத்தில் அப்படிப்பட்ட நரகம்—சுவர்க்கம் தான் போட்டுள்ள திட்டத்தில் ஒன்றென்றும் அது தன்னுடைய டிக்ரியென்றும் இது நடைபெற்றே

திருமென்றும் அருளியிருக்கிருர். இதை ஆஸ்திகர்கள் பூரணமாய் நம்புகிருர்கள். நாம் இங்குசொல்லுவது கடவுளால் அருளப்பெற்ற வேதத்தின் சொற்கள். ஆனுல் இது நாஸ்திக முனிவருக்கு பிடிக்கவில்லை. ராமலிங்கஸ்வாமிகள் என்பார் யார்? இவர் ஓர் ரிஷியா ? இவர் சொன்னது வேதமா? நாயக்கருக்கருக்கு சுயஅறிவுமில்லை. அல்லது விசாரித்தகல்வி யறிவுமில்லை. இவர் சுத்தம் அசுத்தத்தை எப்படித்தெரிய வல்லார்? மார்க்க ஞானத்தில் இவருக்கு அறிவு மிகுந்து மாற்றுப்பார்க்க வல்லவராயின் இவர் இதுவிஷயத்தில் தலையிட லாம். பிள்ளைவரத்துக்குப்போய் புருஷன் இழவந்தவளுக் கொப்பாக கடவுளை விசாரிக்கப்போய் நரக சுவர்க்கத்தையும் அழித்து விட்டார்போலும், நிற்க.

இரண்டாவது சொன்ன முக்தர்கள் (முகாமீன்கள்) இவர்கள் இவ்வுலகிலேயே கண்திறந்து கொண்டவர்கள் கடவுள் ஐக்கியம் பெற்றவர்கள். பேரின்பத்தை பெற்றுக் கொண்டவர்கள். இரண்டறக் கலந்தவர்கள். இவர்கள் அடிமையைவிட்டும் உரிமை பெற்றவர்கள். நரகம் சுவர்க்கம் இரண்டினையும் விட்டு கடவுள் தரிசனத்தையே தங்களுக்குப் பீடமாகக்கொண்டவர்கள். விருப்பு வெறுப்பற்றவர்கள்— இவர்களுக்கு பெயர்தான் ஜெயம்பெற்றவர்கள். இந்த ஞானி களுடைய நிலைமைக்கும் பக்தயோகிகளுடைய நிலைமைக்கும் மலைக்கும் மண்ணுங்கட்டிக்கும் உள்ள வித்தியாசமிருக்கிறது.

முன்சொன்னயோகிகள் அடிமைகளுக்கு ஒப்பாகவும் முக்தர்கள் எஜமானுக்கு ஒப்பாகவுமிருக்கிருர்கள். ஒருவன் பக்தனுயிருந்து நன்மைக்குக் கூலி கிடைக்குமென்றும் தீமை க்குத் தண்டனை விதிக்கப்படுமென்றும் நம்பி நடக்கிறவனுய் இருக்கிருன். அவனுக்கு அப்படியே கிடைக்கிறது. மற் ருெருவன் கடவுள் ஐக்கியத்தையேவிரும்பி கடவுள்தரிசனத்

தையேவிரும்பி இலக்காகவைத்து பாடுபடுகிறான். அவனுக்கு அப்படியே கிடைக்கிறது. இப்படி இரண்டு வகைகளும் வேதப்படியேயிருந்துவருகிறது. இதன் வித்தியாசந்தெரியாமல் ஒருநிலையை மற்றோர் நிலையுடன்முட்டவிடுவது அறியாமையேயாகும். மேற்சொன்ன இரண்டுவகைகளிலும் உண்மையிருக்கிறதென்பதை அறியக்கடவர். நாயக்கர் தூங்கநினைத்து கண்ணை மூடினால் மறித்துவிடுவார் ஆனால் இந்த முக்தர்கள் கண்களை மூடினால் விழித்துக்கொள்வார்கள். இந்த உண்மையை இவர் அறியார்?

இப்போது கூறிவந்துள்ள விளக்கப்படி:—

ஆஸ்திகர்யார்?

இவர்கள் கடவுள்உண்டென்று பக்திவைத்து அவரால் அனுப்பப்பட்டவேதத்தை அதன் வழிபாடுகளாகிய மதத்தையும் பின்பற்றி நடக்கிறவர்கள். இவர்களுக்கு நன்மை—தீமையுண்டு, பாவ—புண்ணியமுண்டு. நரகம்—சுவர்க்கம் உண்டு. மரணத்துக்குப்பின் மனிதர்களை கடவுள் எழுப்பி கேள்வி கணக்கு கேட்பார் என்று நம்புகிறவர்கள். இவர்களுடைய லக்ஷியம் முக்தியடைந்து மோக்ஷவீடடைவதால் அதாவது கடவுள் ஐக்கியம் பெற்று சாந்தி பெறுவதே குறிப்பிட்ட எல்லையாயிருக்கிறது. இவர்கள் மனிதர் எல்லையைவிட்டும் மேல்படிசென்று கடவுள் ஐக்கியம் பெறுகிறார்கள். ஆனால்,

நாஸ்திகர் யார்?

இவர்கள்தான் கடவுள்இல்லை என்பவர்கள். எப்பொழுது கடவுளில்லையோ இவர்களுக்கு வேதமுமில்லை. அதன் வழிபாடுகளாகிய மதமுமில்லை; இவர்களுக்கு நன்மையில்லை தீமையில்லை; பாவமுமில்லை; புண்ணியமுமில்லை; இன்னம் நரக

றுமில்லை; சுவர்க்கமுமில்லை; மரணத்துக்குப்பின் எழுப்பப் படுவார்கள் என்கிற நம்பிக்கையுமில்லை. இப்பொழுது நாஸ்திகர்களுக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாச மென்று நமது நாயக்கரே சொல்லட்டும். சட்டமில்லையாயின் வரம்புஎது? இப்போது நாயக்கர் தன்னுடைய நிலையைத் தெரிந்து கொள்ளட்டும் தான் அழைத்துச் செல்லும் கூட்டத் தாரின் கெதியையும் தெரிந்துகொள்ளட்டும். இப்பொழுது மனிதர்களை நாயக்கர் மனிதவர்க்கத்தைவிட்டு மிருகவர்க்கத் துக்கு அழைச்செல்லுகிறாரென்பதில் சந்தேகமில்லை. இன் றைக்கு ரஷ்யாவில் விளங்கிவரும் இக்கொள்கைபோன்ற நாஸ்திகக்கொள்கையை கடைபிடித்திருக்கும் (Communisim) சமதர்மக்கொள்கையால் தகப்பன்தெரியாத12வயதுபெண்கள் ஹோட்டல்களிலும் ரெஸ்டாரண்டுகளிலும் சுற்றித்திரிந்து தங்கள் மானத்தைவிற்று காலங்கழிப்பதைநினைக்க யார்மனந் தான் துடிக்காமலிருக்காது. இவர் ஹிந்துமதத்தில் ஆபாசக் கொள்கைகளிருந்தால் அதை நேதித்தள்ளி ஒரே பரிசுத்த கடவுளையுடைய இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவதில் என்ன அசேக்ஷபமிருக்கிறது. இவர்மதத்தில் ஆபாசமிருந்தால் கடவுளையே நாஸ்தியாக்குவதில் இவர் கண்ட பலன் என்ன? இவர் நிதானபுத்தியுடன் இதில் கண்டிருக்கும் விஷயங்களை கூர்மையாகக்கவனித்து நேர்வழிபெருவாராகில் நான் மிக்க சந்தோஷமடைவேன் என்பதில் சந்தேகமா? கடைசியாக கனம். ஈ. வெ. ராமசாமி நாயக்கருக்கு இரண்டு கடாக்களை விடுக்கின்றோம். அவைகளுக்கு தக்கபதில் இறுப்பாராக.

(1) ஈ. வெ. ராமசாமி நாயக்கர் உண்டா? உண்டாயின் (சுருதி இவருக்கு இல்லை) யுக்தி அனுபவத்தைக்கொண்டு தத்துவவிசாரணையால் விளக்குவாராக.

(2) ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இல்லையா? இல்லை யாயின் ஏன் இல்லை? இதையும் தத்துவப்படி விசாரித்து பதிலிறுப்பாராக.

---

## முடிவுரை.

உலகத்தில் தோன்றியுள்ள பிறவிகளில்மனிதப்பிறப்பே உயர்வானதென்பது யாவரும் மறுக்க முடியாத உண்மை யாகும். இன்னும் இவ்வுலகத்தில் தோன்றியுள்ள சகல வஸ்துக்களும் மனிதன் வசமாயும் மனிதன் கடவுள் வசமாயு மிருக்கிறன். உலகத்தை சிருஷ்டித்த கடவுள் அவ்வுலகத் தின் கோர்வை குலையாதிருக்கும் பொருட்டும் மனிதன் இல் வாழ்க்கையைநடத்தி முக்திபெரும்பொருட்டும் வேதமெனும் வழிபாடுகளை மனிதவகுப்பினருக்குக் காலத்துக்குக்காலம் அருளிவந்திருக்கிறன். இப்படிப்பட்ட வழிபாடுகளாகிய மதங்களை ஒரு சாரார் பின்பற்றுவதும் மற்றோர் சாரார் அம் மதங்களுக்கு விரோதமாய் நடப்பதுமுண்டு. உலகத்தில் தோன்றியுள்ள எல்லா வகுப்பாருக்கும் கடவுளுடைய எச் சரிக்கை அனுப்பப்படாமலில்லை என்று வேதம் சொல்லுவ தால் ஒவ்வொரு வகுப்பாருக்கும் நியாயமாகக் கடவுளுடைய வழிபாடுகளாகிய 'வேதங்கள்' 'சுஹபுகள்' அனுப்பப்பட்டே யிருக்கிறதென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். அந்தக்காலங் களிலும் (தஹ்ரியாக்கள்) என்றுசொல்லப்படுகிற நாஸ்திகமும் இருந்து வந்திருக்கிறது. ஆனல் இந்த நாஸ்தீகத்தை அனு சரித்த கூட்டத்தார் பன்முறை கடவுளுடைய முனிவால் அழிக்கப்பட்டுப் போயினர். ஆஸ்தீகம் ஒன்றே மீதியாக யிருந்துகொண்டு வருகிறது. கடவுளை தூஷிப்பதினலும் அல்லது கடவுள் இல்லை என்று சொல்வதினலும் கடவுளுக்கு கூடுதல் குறைவு ஒன்றும் ஏற்படுவதில்லை. கடவுளோ

தோர்வையற்றவர். இவர்கள் வணங்குவதாலும் அல்லது தூஷிப்பதாலும் கடவுளுக்கு ஒன்றுமில்லை. ஆனல் இவர்கள் தங்கள் ஆத்மாவுச்குப் புண்ணியத்தையோ பாபத்தையோ தேடிக்கொள்ளுகிருர்களென்றறியவும். நாஸ்தீகத்தை இல் வாழ்க்கைக்கு ஆதரவாகக்கொள்ளவே முடியாது. இதில் வரம் பொன்றுமில்லை. இன்னும் உலகத்தின் கோர்வை குலேயாது நடந்துகொள்ள இதில் ஒருவழியுமில்லை. ஆனல் இப்பொழுதுயிருச்கும் 'ஹிந்துமதம்' நாஸ்தீகக் கொள்கையை உற்பத்தி செய்வதற்குக் காரணம். ஏனென்ருல் கடவுள் மனிதர்களே ஒரேவிதமாய்ப் படைத்திருக்க பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றும் இதில் சிலர் சிலரைத் தீண்டாதாரென்றும் கற்பித்துக் கொண்டார்கள். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் ஒரே சுதந்திரமிருக்கும் போதும் ஆண்களுக்கு சுதந்திரமும் பேண்களுக்கு சுதந்திர மறுப்பும் கற்பித்துக் கொண்டார்கள். ஆலயப்பிரவேச மறுப்பும் எண்ணிக்சையற்ற சுவாமிகளும் கற்பித்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட மதத்தை சடவுளால் அனுப்பப்பட்டப்புனித மான மதமாகக் கொள்ளமுடியாத நிலேமைக்கு கொண்டு வந்து விட்டார்கள். இந்த ஆபாச நிலேமையை எடுத்துக் காண்பித்து ஷெ மதத்தினரை கனம் ஈ. வெ. ருமசாமி நாயக்கர் கண்டிப்பதை நாம் பாராட்டுகிரேம். இந்தமதத்தில் அநேசமாக மனிதபண்பை காலத்துக்குக் காலம் புகுத்தி வேதத்தின்உண்மையைமாற்றிவிட்டார்கள். இதைத்திருத்துவதற்கு முடியாதகாரியம். உதாரணமாக மகாத்மாகாந்தி ஹரிஜனங்களே உயர்த்துவான் வேண்டி எடுத்துக்கொண்டு இருக்கும் முயற்சி எவ்வளவுதூரம் பலித்திருக்கிறதென்பதை கவனித்தால் உண்மைவிளங்கும். இன்னும் மகாத்மாவுடைய காலத்துக்குப்பிறகு இந்தஇயக்கம் என்னவாகுமென்பதையும் ஊகித்துக்கொள்ளலாம். இன்னும் இந்த ஹிந்துமதத்தில்

இருக்கும் வைதீக சனாதனதார்மிகள் தீண்டாமையை ஒழிப்பதற்கு எதிர்ப்பிரசாரம் செய்து வருகிறார்களென்பது தெரிந்த விஷயமே. இக்காலத்தில் மஹாத்மா காந்தியால் ஹிந்து மதத்தை புனருத்தாரணம் செய்ய முடியாதிருக்கும்போது இனி இந்த மதமும் இதைப் பின்பற்றுபவர்களும் நாளுக்கு நாள் குறைந்து வேறுமதத்தைப் பின்பற்றுவார்கள் என்பது நிச்சயம்.

இப்போது இஸ்லாம் மதத்தை எடுத்துக் கொள்வோம். இந்த மதந்தான் உலகந்தோன்றியது முதல் உலகம் முடிவு நாள்வரையிலும் இஸ்லாம் மதம் ஒன்றே கடவுள் சம்மதம். இதற்குத்தான் முக்தி மார்க்கமென்று சொல்லப்படும். உலகம் தோன்றியதுமுதல் கடவுளால் அனுப்பப்பட்டவர்களென்று சொல்லப்படும் நபிமார்கள் வழியாக வேதங்களை அனுப்பி மனிதர்களுக்கு முக்திவழி போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. கடசியாகஎங்கள்நபி முஹம்மத்சல்லல்லாஹு அலைஹிவசல்லம் உலகில் அவதரித்து கடவுளால் அருளப் பெற்ற புர்க்கான் வேதத்தைக் கொண்டுவந்தார்கள். இந்த வேதம் எப்படி வெளிவந்து கொண்டிருந்ததோ அப்போதைக்கப்போது எங்கள் நபியுடைய தோழர்கள் மனப்பாடம் செய்து வந்தார்கள். அந்த குர்ஆன் முடிவடைந்தபோது நூற்றுக்கணக்கானவர்கள் மனனஞ்செய்திருந்தார்கள். இன்றைக்கு எங்கள் புர்கான் வேதத்தை மனனஞ்செய்தவர்கள் இலக்ஷக்கணக்கிலிருக்கிறார்கள். இதன் விசேஷமென்னவெனில் அன்று வெளியான வேதவாக்கியம் எப்படியோ அப்படியே அ ஆ என்று குறில் நெடிலாகக்கூட மாறாதபடிக்கு இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒருவரும் ஓர் சொல்லைக்கூட மாற்றமுடியாதபடிக்கு காக்கப்பட்டுவருகிறது வேதவாக்கியங்களுக்கு நாயகவாக்கியங்கள் முரண்பட்டதாகக்

காணப்படின் உடனே அந்த நாயசவாக்கியத்தை நேதிவிடும் படிச்சு எங்கள் நபிகள் நாயகத்தின் ஆக்ஞை இருந்து கொண்டிருக்கிறது. (இங்கு ஹிந்துக்களின் வேதம் ஒரு புறமும் சாஸ்திரம், புராணம், இதிகாசங்கள் மற்ருேர்புறமும் இழுத்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.) ஆகவே எங்கள் வேதத்துக்கு முரண்பட்டதாகவுள்ள எதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லே. இதில் கடவுளைப்பற்றிய ஏகத்துவம் இதில் கடவுளுக்கு இணை துணை கற்பிக்காது. கடவுளுடைய தூய்மையை ஸ்தாபிக்கவும், அவர் செய்துள்ள உபகாரத்துக்கு நன்றி பாராட்டவும், அவரைப்புகழவும் ஏவப்பட்டிருக்கிறது.

"சமத்துவம்" ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சுதந்தரமுண்டு. இன்னும் கடவுளுக்கு முன்பாக அரசனும் ஆண்டியும் ஒன்றே என்பதாம்.

"சகோதரத்துவம்" என்றைக்கு ஒருவன் கலிமாவைச் சொல்லி ஈமான் கொண்டானே அன்றே அவன் மூமின் களுக்குச் சகோதரராகி விடுகிருன்.

"சன்மார்க்கம்" சாலிஹான அமல் என்று சொல்லப் படும் சகல சன்மார்க்கத்துரைகளிலும் வேத விதிப்படி நடப்பதாம்.

எங்கள் வேதத்தில் மனித வாழ்க்கைக்கு வேண்டிய சகல பாக்கியங்களும் பூர்த்தியாக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு மனிதன் 1000-வருஷம் ஜீவித்திருந்து ஓர் சட்டம் நல்லதென்று கொண்டு வருவானுகில் அது இஸ்லாம் மதத்தின் ஓர் கடசி சட்ட மாகவே காணப்படும். எந்தக்கடவுள் உலகத்தை சிருஷ்டித் தாரோ அதேகடவுள் அந்த உலகத்தில் நடக்கவேண்டிய வழிபாடுகளேயும் அவ்வுலகத்தின் சோர்வைகள் குலேயாதிருக்க

சட்டங்கள் வகுக்கிறபோது அதைவிட உன்னதமான ஓர் சட்டதிட்டத்தை வகுக்கயார்வல்லார்? ஆகவே இஸ்லாம் மதத்தின் வழிபாடுகள் எல்லாவகுப்பாருக்கும் இன்னும் எல்லா ஜாதியாருக்கும் நேர்மையான வழியென்றே ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இப்போது இஸ்லாம் மதமானது தன்னிலே ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், சன்மார்க்கம். இவைகளை ஒருவித குறைவின்றி அமைத்துவைத்திருக்கிறதோடு சித்தாந்தம் வேதாந்தம் இரண்டும் ஒருங்கே அமையப்பெற்று வேதமானது சொல்லோடு நில்லாமல் செயலாக நடத்தப்பெற்று வருவதை யாவரும் அறிந்துகொண்டிருக்கிறார்கள்.

## முஸ்லிம்களின் சித்தாந்தம், வேதாந்தம்.

இவைகள் இரண்டையும் கொஞ்சம் விவரிப்பாம்:—

முஸ்லீம்களுக்கு விதியாக்கப்பட்டிருக்கும் 5 நேரத் தொழுகைகளிலும் எது சித்தாந்திகளால் தியானிக்கப்படுகிறதோ அதுவே வேதாந்திகளுடைய கொள்கையும் தியானமுமாயிருக்கிறது. இந்தத்தொழுகை 3 சொற்களைக்கொண்ட தியானமாயிருக்கிறது. அவைகளாவன:—

| | | |
|---|---|---|
| சுபஹானல்லாஹ். | அல்ஹம்துலில்லாஹ். | அல்லாஹுஅக்பர். |
| தூய்மை. | ஆனந்தம். | பூரணம். |

மேற்கண்ட மூன்றுசொற்களே தொழுகையின் உயிராயிருக்கிறது, மற்றதெல்லாம் சில்லரைக் கிரியைகளாயினும் மனம், வாக்கு, காயங்களால் செய்யப்படுகிற வணக்கமாக 5 நேரத்தொழுகை மனிதர்கள்பேரில் விதியாக்கப்பட்டிருக்கிறது. இப்படி கடவுளை வணங்குவதில் எவ்வித இணையும்

அபரிபூரணதோஷமும் ஏற்படுவதில்லை. முஸ்லீம்களில் சித்தாந்திகளோ அல்லது வேதாந்திகளோ கடவுளைத்தவிர வேறு எதற்கும் தலைசாய்ப்பதில்லை. ஆனால் ஹிந்துக்களில் சித்தாந்திகள் கடவுளுக்கு இணையாக 1000கணக்கான சுவாமிகளை வணங்கலாம். உதாரணமாக 'வந்தேமாதரம்' என்பதை எடுத்துக்கொள்வோம் "(பாரத) மாதவை வணங்கு கிறேன்" என்பதாம். கடவுள் ஓர் குழந்தையை தாய் வயற்றினின்றும் வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே தாய் மார்பில் பாலைத்தயார்செய்து கொள்ளுகிறார். பிள்ளைக்காகப் பால்தயார்செய்யப்பட்டதேதவிற பாலுக்காசப் பிள்ளை அல்ல வென்பதை ஞாபகத்தில்வைத்துக் கொள்ளவேண்டும். அப் படியே மனிதவர்க்கத்தை உலகத்தில் படைப்பதற்கு முன்ன தாக இவ்வுலகைப் படைத்து இது ஆடாதிருக்கும்பொருட்டு மலைகளென்னும் ஆணிகளால் தரைந்நு புற்பூண்டுகளென்னும் விரிப்பால் பூமியைமூடி வாசனத்துக்காகவும் மற்ற உப யோகத்துக்காகவும், நாற்கால் ஜெந்துக்களைபடைத்தும் உலகில் ஒளிப்பிரகாசத்தை உண்டுபண்ணவேண்டி சூரியன் சந்திரன் இவைகளையும் சிருஷ்டித்து மனிதர்களைப் போஷிப்பதற்காக கனிவர்க்கங்கள் தானியங்கள் சகிதம் தயாரித்துக்கொண்ட பிறகே மனிதர்களை இவ்வுலகில் சிருஷ்டித்திருக்கிறார். இப் போது இவ்வளவு சிருஷ்டிகளும் மனிதனுக்காவா? அல்லது மனிதன் இச்சிருஷ்டிகளுக்காகவா? இதற்கு பதில் இவ்வளவு சிருஷ்டிகளும் மனிதனுக்காகவே என்றுதான் சொல்லி தீரவேண்டும். அப்படியானால் 'மனிதன்' தனக்கு இவ்வளவு பாக்கியங்களையும் அளித்த கருணாநிதியான கடவுளுக்கு வணக்கம் செலுத்துவானா? அல்லது மனிதனுக்கு அடிமை களாகவும் மனிதனுடைய உபயோகத்துக்காகவுமாக சிருஷ் டிக்கப்பட்ட உலகமாதாவுக்கு வணக்கஞ்செய்வானா? இந்த ஹிந்துசித்தாதிகள் கடவுள் அல்லாத சிருஷ்டிப்பொருளை

வணங்குகிறார்கள். ஆனால் வேதாந்தம் இதில் முரண்பட்டே காணப்படும். இதனால்தான் ஹிந்துக்களின் சித்தாந்தம்வேறு வேதாந்தம்வேறாகவும் காணப்படுகிறது. முஸ்லீம்களுக்கு எது சித்தாந்தமோ அதுவே வேதாந்தமாயிருக்கிறதென்றறியவும்.

ஹிந்துமதத்தில் மேற்சொல்லிவந்த ஏகத்துவம் சமத்துவம் சகோதரத்துவம் சன்மார்க்கம் இவைகள் மிக்க நேர்மையற்றதாகவும் பல கடவுள் வணக்கம் சமத்துவ மின்மை சகோதரத்வ வேற்றுமைகளோடு பல ஆபாச ஒழுக்கங்கள் புகுந்து மதத்தின் புனிதத்தன்மை மாறிவிட்டது. அதோடு சித்தாந்தம் வேறு வேதாந்தம் வேறாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது மனித வாழ்க்கைக்கு ஏற்றதாகவுமில்லை. அல்லது இதை புனருத்தாரணம் செய்வதற்கு ஏலாதபடிக்கு ஆபாசக்கொள்கைகள் வேறான்றி விட்டன. ஆகவே கனம் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் இந்த மதத்தை வெறுப்பதற்கு போதிய காரணங்களிருந்துகொண்டிருக்கின்றன. இதற்காக இவர் நாஸ்தீகத்தைப் பரத்தினால் இவர் அடையும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இதோ மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததான இஸ்லாம் மார்க்கமிருக்கிறது. இதை இவர் பின்பற்றி இவர் கூட்டத்தவரையும் அவ்வழியே அழைத்துச் செல்லுவாராயின் நேர்வழி பெற்று முக்தி சாதனத்தைப் பெறுவதற்கும் ஹேதுவாய்விடுமென்பதில் சந்தேகமில்லை. அப்படிச் செய்ய முன்வருவாரா ?

## முஸ்லீம்களுக்கு ஓர் எச்சரிக்கை.

சூரியனுக்கு பிரகாசம் உண்டென்று இந்த நாஸ்திக முனிகள்தான் முஸ்லிம்கள் மகாநாட்டில் பிரசங்கம் செய்ய வேண்டுமோ? இஸ்லாத்தின் ஜோதி உலகெங்கும்விரிந்த

கதிருடன் பிரகாசித்துக்கொண்டிருப்பதை யார் மறுக்க வல்லார்? உலகில் பெரிய அறிவாளியென்றும் (நோபல் பிரைஸ் பெற்ற Bernad Shaw) பெர்னுட்ஷா என்பவர் என்ன சொன்னர். உலகை இயற்கைக்கும் மனித சுபாவத்திற்கும் ஏற்றமதம் 'இஸ்லாம்' ஒன்றேஎன்றும் சிலகாலத்திற்குள் எஞ்சி நிற்கும் மதம் 'இஸ்லாம்' ஒன்றேயென்றும் பகிரங்கமாய்செப்பியுள்ளார். நம்மார்க்கத்தைகடைப்பிடிக்காத எவரும் நம் மார்க்கத்தை உயர்வாய்பேசுவது முஹபிக்தனமேயாகும். முஸ்லிம்கள் சுவாமி ஷிரத்தானந்த்ஜீயை பள்ளிவாசலுக்குள் அழைத்துப் பிரசங்கஞ் செய்வித்தார்களே அந்த சுவாமிஜீ 50,000 முஸ்லிம்களை காபிராக்க எடுத்துக்கொண்ட முயற்சி நம் மனதை விட்டும் இன்னம் மறக்கவில்லையே. முன்னேபோகிறவன் தடுக்கி விழுந்தால் பின்னேபோகிறவனுக்கு தீவெட்டி பிடித்தது போலென்பார்கள். அப்படியே முன்செய்த முஷ்ரிக்கைப்போலவே இந்த 'முர்த்தத்' களும் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது இச்சிறு வெளியீட்டினுல் நாஸ்தீகத்தை மறுத்தும் ஆஸ்தீகஞானத்தை போதித்துமிருக்கிறோம். கனம் ஈ. வெ ருமசாமி நாயக்கர் தமது நாஸ்திகக் கொள்கையை குடி அரசு, விடுதலை முதலிய பத்திரிகைகள் மூலம் பிரசாரஞ் செய்து வருகிருர் என்பது வெளிப்படை. அரசியல் துரையில் முஸ்லீம்களோடு ஒற்றுமைப்பதாகக்கூறி மேற்சொன்ன நாஸ்தீக பத்திரிகைகளாகிய குடி அரசு, விடுதலைகளை முஸ்லீம்களுடைய ஒவ்வொரு வீட்டிலும் நுழையச்செய்துவிட்டார். இந்தப் பத்திரிகைகளிலும், சுயமரியாதை மகாநாடுகளிலும், நாஸ்தீக மலம் வீசாமலில்லை. இந்த துர்நாற்றத்தை அகற்ற முயற்சிப்பது ஒவ்வொரு முஸ்லீம்களுடைய சடமையாகும். இந்த நாஸ்தீக போதனையால் பலர் கெட்டுப்போசக்கூடிய பயமிருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்

களில் அன்பியாக்களுக்கு வாரீஸ் என்று சொல்லப்படுகிற உலமாக்கள் என்ன செய்கிறார்கள்? நம் தென்னாட்டில் 'பாக்கவிகளும்' 'நூரிகளும், நிறைந்திருந்தும் யாருக்கோவந்த விருந்தென வாளாவிருப்பது நமக்கு மிகமிக ஆச்சர்யத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இனியாகிலும் இந்த உலமாக்கள் நாஸ்தீகம்பரவாமல் தடுக்கபோதிய முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களென்று ஆதரவு வைக்கின்றேன். இதைக் கண்ணுறும் ஒவ்வொருவம் 'குடி அரசு' 'விடுதலை' முதலிய பத்திரிகைகளை வரவழைத்துப் பார்ப்பதை 'ஹராம்' என்று கருதவேண்டும். இன்னும் தங்கள் தோழர்களாகிய மூமின்களுக்கும் இதை எச்சரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் மேற்படி பத்திரிகைகள் 'நாங்கள் ஆஸ்தீக கொள்கையை கடைப்பிடிக்கிறோம் யென்றும் எல்லா வற்றையும் படைத்துக்காத்து ரக்ஷித்தாளுகிற ஒரே கடவுளை நம்புகிறோமென்றும் பகிரங்கமாய் ஷை பத்திரிகைகள் மூலம் பறைசாற்றுதவரையிலும் ஷை பத்திரிகைகளை முஸ்லீம்கள் ஒருபோதும் ஆதரிக்கக் கூடாதென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அகரமுதல வெழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

வஸ்ஸலாம்.

இப்புத்தகம்
வேண்டுபவர்கள்
பாபநாசம் தாலூகா வழுத்தூர்,
பா. கு. அப்துர்ரஹ்மான்
அவர்களிடத்தில்,
பெற்றுக்கொள்ளலாம்.

நாஷனல் பிரஸ்,
பெரியகடைத்தெரு,
கும்பகோணம்.

—0—